Page: —573—

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 16	குரோதி ஸு பங்குனி மீ	வருட சந்தா
இதழ் : 12	மார்ச்சு—ஏப்ரல் மீ 1965	ரூ. 3-00



சோமசுந்தரர் சித்தராய் சோழனை வழிபட உதவுதல்

சித்திர விளக்கம் 35] [பக்கம் 532

ACC. NO. 9886.



பொருள் அடக்கம்

பக்கம்

1. மானிடமும்—மான்இடமும் (திருப்புகழ்மணி) ... 529
2. விடையிலேச்சினை யிட்டது
   (கி. வா. ஜகந்நாதன்) ... 532
3. 'ஓதுவித்தவர்' திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) 536
4. சண்முக கவச விளக்கம் (திருப்புகழ் சதுரர்
   சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 545
5. யமனுக்குப் பாதுகாப்பு (கி. வா. ஜ.) ... 548
6. பழைய வாசனை (ரஸபதி) ... 553
7. அருணகிரிநாத சுவாமிகள்
   (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 562
8. வானத்தின்மீது...! (அருணகிரிதாசன்) ... 568
9. Life Boat
   (*Thiruppugal Mani*) ... 572

Grams: MURSOKS. Phone: 51388

" சிகண்டி யூருறை பெருமாளே!
குறைகழல் பற்றிப் புகழ்ந்து வாழ்வுற அருள்வாயே!"

வெண்மையான சலவைக்கு
ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர்: D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இண்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ௵ பங்குனி ௴ மார்ச்—ஏப்ரல் 1965	இதழ் 12

மானிடமும் — மான் இடமும்

(திருப்புகழ்மணி)

மான் விளையாடுமிடம் தினைப்புனம். தினைப் புனத்தில்தான் முருகன் வள்ளியைத் தேடி வந்தான். ஆட்கொண்டான். மான் பேதமற்றது. அதைப் போல் பேதமற்று எல்லா ஜீவராசிகளையும் சமமாகப் பார்ப்பதே மானிடம். அதுவே மானிடப் பிறவியின் நோக்கம். மானிடமாக இருந்தால்தான் முருகனுடன் கலக்கலாம். மானிடமாக யிராமல், காமக்குரோதாதிக ளாகிய புலியிடமாக யிருந்தால் முருகனுடன் கலக்க முடியாது. அதனால்தான அருணகிரியார் மானிடமாக (மானிடராக) வந்தார். கந்தனைவிட அருணகிரியார் பெரியவர். ஏன் ? மான் இடமாக (மானிடத்திலிருந்து) வந்த வள்ளியைக் கந்தன் தேடிச்சென்று அவளுடன்

வாளா இருநதாலும், வந்துவந்து மோதுவினைக்(கு)
ஆளாகி, அஞ்சுமென்னை ஆண்டவனே ஆளாயோ?

கலந்தான். தான் வள்ளியுடன் கலந்த நிலையாகிய சங்கர நாராயண ஸ்வரூபமாகிய அநுபூதியையே அருணகிரியாருக்குக் கொடுத்து விட்டான். முருகன், குமரன், குஹனென்று சொல்லி உருக அந்தப் பரமானந்த வெள்ளத்தில் மனத்தைக் கரைத்து முருகனுடன் கலந்து விட்டார். முருகனுடன் கலந்த நிலையில் அருணகிரியாருக்கு வெளிப்பட்டதே அநுபூதி. அநுபூதியைப் பாராயணம் செய்தால் பேசா அநுபூதியாகிய மௌனம் பிறக்கும். அந்த மௌனத்தில் முருகனைக் காணலாம்.

"தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே"

என்று அநுபூதியாகிய மௌனத்தின் இயல்பையும்,

"பத்தித் திருமுகமாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித்திருக்கும் அமுது கணடேன் செயல் மாண் டடங்கப்
புத்திக கமலத் துருகிப் பெருகிப் புவன மெற்றித்
தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே"

என்ற கந்தரலங்காரப் பாட்டில், அநுபூதியால் தான் அடைந்த ஆனந்தத்தையும் உணர்த்தி விட்டார். சிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து ஞானச்சுடராய்த் தோன்றி கங்கையை யடைந்து ஆறுமுகனாக வெளிவந்தான் முருகன். மகாவிஷ்ணுவின் இரு கண்களிலிருந்து தோன்றி தேவலோகத்தில் வளர்ந்த

எஙகே பதுஙகி யிருநதாலும், முனவினைதான
அஙகஙகே வந்துத்தன் ஆடல்புரி கின்றதுவே.

வள் தெய்வயானை. மகாலக்ஷ்மியாகிய மானிடத்தி லிருந்து மனித உருவாக வெளிப்பட்டு குறவர்களால் வளர்க்கப்பட்டவள் வள்ளி.

தெய்வயானை கரும மார்க்கத்தினுல் முருகனை யடைந்த ஜீவன். அன்பினுல் முருகனை யடைந்த ஜீவன் வள்ளி. இருவரும் அன்பினுல் முருகனுடன் கலந்து வாழுக்கை நடத்துபவர்கள்.

ருக்மணி, கிருஷ்ணனை வள்ளிபோன்ற மனே நிலையில் அடைந்தவள். எங்கும் கிருஷ்ணனைக் கண்டு எல்லாம் அவனுக நினைத்து அவனுடன் கலந்து வாழ்க்கை நடத்தியவள்.

சத்யபாமை கிருஷ்ணனிடம் அளவற்ற பிரேமை கொண்டவள்தான். ஆனுல் அவளிடம், 'நான்' எனது என்ற எண்ணம் போகவில்லை. அதனுல், கிருஷ்ண னுடன் கலக்க முடியாமல் வெகு சிரமப்பட்டாள். இவள் பொன்னை உடலில் பூண்டு அதனுல் கண்ண னைத் தன் வசம் செய்யலாம் என்று நினைத்தாள். பொன்னிலும் பொருளிலுமுள்ள ஆசை போகா தவள். ருக்மணியோ பொன்னையும் பொருளையுமே கிருஷ்ணனுக நினைத்து, அவனுடைய நாமத்தை நாவிலே பூண்டாள். தன் உள்ளத்தையே தூய துளஸீ தளமாக்கிவிட்டாள். சத்யபாமை வீட்டில் நட்ட அருள்மரமாகிய பாரிஜாதமலர் ருக்மணியின் வீட்டில்தான் மலர்ந்தது. சத்யபாமை பொன்னைக் கொடுத்து கண்ணனை வாங்க முடியாமல் தவித்தாள்.

அடியேனறன் நெஞ்சுள், அரசேநீ தங்கில்,
கொடிய வினைகளின் கூராற்றல் குன்ருதோ?

ருக்மணியோ தன் உள்ளமாகிய துளஸியைக் கொடுத்தவுடன் அவளுடைய நானற்ற பக்தி வெள் ளத்தில் கண்ணன் ஆழ்ந்து விட்டான்.

பக்திவழியும் கர்மவழியும் ஒன்றுபட்டுக், கந்த னுடன் கலந்து வாழ்ந்த ஜீவர்கள் வள்ளி தெய்வானை யிருவரும்.

நானற்ற பக்தியினுல் எல்லாம் பகவானுகக் கண்டு அவனுடன் கலந்து வாழ்க்கை நடத்திய ஜீவனே ருக்மணி. பகவானுடன் கலக்க விரும்பியும் நானென் பது குறுக்கிட்டதால், கலக்க முடியாமல் சிரமப்பட்ட ஜீவன் சத்யபாமை. ராதையென்பது ருக்மணியின் மனம். பகவானுடன் இரண்டறக் கலந்த நிலையே ராதை.

சித்திர விளக்கம் 35

விடையிலச்சினை யிட்டது

[கி. வா. ஜகந்நாதன்.]

காடுகளை வெட்டி அழித்து அங்கங்கே குடிமக்களைக் குடியேற்றி, அவர்களுக்கு வேண்டிய நலங்களைச செய்து வந்தான ஒரு சோழ மன்னன். அவனைக் காடுவெட்டிச் சோழன என்றே யாவரும் அழைத்தனர். காஞ்சீபுரத்தில் இருந்து அரசாண்டு வந்தான் அவன். அவன் சிவபக்தியிற் சிறந்து நின்று திருநீறும் கண்டிகையும் அணிநது சிவபுரா ணஙகளைக் கேட்டு மகிழ்ந்து வாழ்நது வந்தான.

நல்லோர் புரியாசி, நம்பினேற் கெய்துமெனில,
வல்லாட்சிக் கன்மம், வலிகுறைந்து போகாதோ?

அவனுக்கு மதுரையில் எழுந்தருளி யிருக்கும் சொக்க நாதப் பெருமானையும் அங்கயற்கண்ணி யம்மையையும் தரிசனம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் உண்டாகி வளர்ந்து வந்தது. பாண்டி நாடடிலுள்ள அத்தலத்துக்கு எப்படிச் செல்வது என்று எண்ணிக் கவலையுற்றான். பாண்டி யனுக்கும் சோழனுக்கு மிடையே பகைமை இருந்தது.

ஒருநாள் இறைவன் ஒரு சித்தரைப் போல அவன் கனவில் எழுந்தருளி, "நீ ஒன்றும் அஞ்சாதே; உன்னுடைய கோலத்தை யாரும் அறியாதபடி மாற்றிக்கொண்டு தனியே மதுரை வந்து வழிபட்டுப் போவாயாக!" என்று அருளி மறைந்தான். சோழன் விழித்துக்கொண்டு இறைவன் திருவருளை எண்ணி வியந்தான். எம்பெருமான் பணித்த படியே இரவோடிரவாக வேறு கோலம் பூண்டு தனியே புறப்பட்டுச் சென்றான். வேகமாகப் பல இடங்களைக் கடந்து வையை யாற்றை அணுகியபோது, அது வெள்ளம் மிக்குக் கடக்க முடியாத தடையாக நின்று குறுக்கிட்டது. அதைக் கண்டு வருந்திய சோழனுடைய துயரம் தீர எம்பெருமான் சித்த வேடத்தோடு அவன்முன் எழுந்தருளி வந்து, வையை யாற்றினமேல் தன் கண்பார்வையை ஓட்டவே, வெள்ளம் வற்றியது.

சோழனை அழைத்துச் சென்று மதுரை மாநகரின் வடக்கு வாயிலைத் திறந்து, வீதிகளின் வழியே போய்க் கோயிலை அடைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் அவனை நீராடச் செய்தார் சித்தர். அப்பால் உள்ளே சொக்கலிங்கப் பெருமானையும் மீனாட்சி யம்மையையும் வழிபடும்படி செய்தார்.

தன்னுடைய விருப்பம் நிறைவேறப் பெற்ற காடு வெட்டிச் சோழன் சுந்தரேசக் கடவுளை அன்போடுருகிப் பணிந்து போற்றினான். வாயாரப் பாடி வாழ்த்தினான்.

இந்த உலகில், எவரும் எனையிழுத்துப
பந்தப் படுத்தாமல், பாரெம் பரமேட்டீ!

" எண்ணிய எண்ணி யாங்கே
யான்பெற முடித்தாய் போற்றி;
பண்ணியல் மறைகள் தேரும்
பால்மொழி மணாள போற்றி;
புண்ணியர் தமக்கு வேதப்
பொருளுறை பொருளே போற்றி;
விண்ணிழி விமானம் மேய
சுந்தர விடங்க போற்றி!"

" எவ்வுடல் எடுத்தேன் மேனுள்
எண்ணிலாப் பிறவி தோறும்
அவ்வுடல் எல்லாம் பாவம்
அறம்பொருட் டாக வன்றே?
தெவ்வுடல் பொடித்தாய், உன்றன்
சேவடிக் கடிமை பூண்ட
இவ்வுடல் ஒன்றே யன்றே
எனக்குடல் ஆன தையா!"

என்று உள்ளம் கனிந்து துதித்தான்.

இவ்வாறு வழிபட்ட சோழனைப் பார்த்துச் சித்தர், "இனி நெடு நேரம் இங்கே இருநதால் பாண்டியன் நீ வந்ததை அறிநது கொள்வான். அறிந்தால் உனககுத் துன்பம் செய்வான். ஆகையால் நீ திரும்பி உன் ஊருக்குப் போவாயாக" எனறு சொல்லி அவனை வையையின வடகரையளவும் கொண்டுவந்து விட்டார். அவன் நெற்றியில் திருநீறு சாத்தி விடை கொடுத்தனுபபிய சித்தர், வடக்கு வாயிலைப் பழைய படியே பூட்டி அதன்கண் இடப அடையாளம் பதித்துத் தம் கோயிலுக்குட் புகுநது மறைந்தார்.

சுயநலத்தில் எனறும் சுழிக்காமல், என்னைப்
பயப்படுத்தி ஆண்டால், பல்லிளிக்க மாட்டேனே.

மறுநாள் விடிந்தவுடன் காவலர்கள் வாயிற கதவுகளைத திறக்கும்போது, வடக்கு வாயிற் கதவில் விடை இலசசினை இருப்பதைக் கண்டு ஐயுற்றார்கள். மற்ற வாயில்களி லெல்லாம் முதல்நாள் இட்ட பாண்டியன் இலச்சினையாகிய மீன் அடையாளம் அப்படியே இருக்க, வடக்கு வாயிலில் மட்டும் இடப இலச்சினை இருக்கக் காரணம் என்ன என்று யோசிததார்கள். பிறகு பாண்டிய மன்னனை அடைந்து இந்தச செய்தியை விண்ணப்பித்துக் கொண்டார்கள். மன்னனும் வடக்கு வாயிலை அடைந்து அவர்கள் கூறியபடி இருத்தலைக் கண்டு, 'இந்த அடையாளத்தைப் பொறிததவர் யார்?' என்று யோசித்து மயங்கி அரண்மனையை அடைந்தான்.

அவனுக்கு மிக்க வருததம் உண்டாயிற்று. உணவை உட்கொள்ளவில்லை. பாயில் படுக்காமல் தரைமேல் படுத்து உறங்கலானான். அப்போது இறைவன அம்மன்னன் கனவிலே தோன்றி, "கச்சியில் உள்ள காடுவெட்டிச் சோழன நம்மிடம் அளவில்லாத பக்தி யுடையவன. இங்கே வந்து தரிசிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டான. அவனை வடக்கு வாயிலைத் திறந்து அழைத்து வந்து அநுக்கிரகம் செய்து மறுபடி அந்த வாயில் வழியே அனுப்பிவிட்டு, வாயிலைத் தாழிட்டு நம்முடைய இடபப பொறியைப் பொறித்தோம்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தான்.

குலபூஷணனென்னும் பெயரையுடைய அப்பாண்டியன் துயிலினின்றும் எழுநது எம்பெருமான் பெருங்கருணையை எண்ணி வியநது பாராட்டித் துதிததான். இந்த அற்புதத்தைப பலரும் தெரிந்து கொள்ளும்படி வெளியிட்டான். யாவரும் இதனை அறிந்து சொக்கநாதன அருளை யெண்ணி வாழ்த்தினர்.

குலபூஷண பாண்டியனுக்குப் பின அவன மகன இராசேநதிர பாண்டியன முடிசூடிச சொக்க நாயகனுக்கு அன்பு செய்து செங்கோல் செலுத்தி வநதான்.

ஓடும் கடிகார முளனை உணாபொழுதே,
நாடி நரம்பு நடுங்குமெனை யேலாயோ?

பொது

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

ஓது வித்தவர் கூலிகொ டாதவர்
மாத வர்க்கதி பாதக மானவர்
ஊச லிற்கன லாபெரி காளையர் மறையோர்கள்
ஊர்த னக்கிட ரேசெயு மேழைகள்
ஆர்த னக்குமு தாசின தாரிகள்
ஓடி யுத்தம ருதிய நாடின ரிரவோருக்
கேது மித்தனை தானமி டாதவர்
பூத லத்தினி லோரம தானவர்
ஈசர் விஷ்ணுவை சேவைசெய் வோர்தமை யிகழ்வோர்கள்
ஏக சித்ததி யானமி லாதவர்
மோக முற்றிடு போகித முறினர்
ஈன ரித்தனை பேர்களு மேழ்நர குழல்வாரே ;
தாத தத்தத தாதத தாதத
தூது துத்துது தூதுது தூதுது
சாச சச்சச சாசச சாசச சசசாச
தாட டட்டட டாடட டாடட
டுடு டுட்டுடு டுடுடு டுடுடு
டாடி டிட்டிடி டிடிடி டிடிடி டிடிடிடி
தீதி தித்திதி தீதிதி தீதிதி
தோதி குத்திகு தோதிகு தோதிகு
சேகு செக்குகு சேகுகு சேகுகு செகுசேகு
சேயெ னப்பல ராடிட மாகலெ
ஆயு முத்தமர் கூறிடும் வாசக
சேகு சித்திர மாகதி னுடைய பெருமாளே !

கருத்துள் புகுந்துளநீ, கண்கருணை காட்டில்,
வருததும் பிறவி வழிமறைந்து போகாதோ?

(பதவுரை.) (தாத...............சே எனப் பலர் ஆடிட,)

ஜே ஜே எனும் (ஜெயதாள) ஒலியமைய, (அணுகியிருந்த) பலர் ஆட ;

சேகு சித்திரம் ஆக நிண் ஆடிய பெருமாளே - வயிர(த் திருமேனி) வனப்புத் தோன்ற (தாள்) ஊன்றித் தாண்டவம் செய்த மேதகு பெருமை மிக்கவனே !

[சேகு - வயிரம். சித்திரம் - ஓவியம். நின்று என்பது, உலகியல் வழக்காய நின்னு என்றாகி, ஓசையின்பம் கருதி நிண் என நின்றது.]

மா கலை ஆயும் உத்தமர் கூறிடும் வாசக - புனித கலைகளை ஆய்வதையே பொழுது போக்காக வுடைய அறவோர் போற்றும் (உயர்ந்த) சொற்கட்கு உரியவனே !

(1) ஓதுவித்தவர் கூலி கொடாதவர் - ஓதுமாறு அருள் நூற்களை உணர்த்திய உத்தம குரவற்கு, (அற்ப) கூலியைக் கூட அளிக்காதவர்களும்;

(2) மாதவர்க்கு அதி பாதகம் ஆனவர் - அருந்தவம் செய்யும் ஆன்றோர்க்கு, (வீணுகப்) பெரும் இடையூறு விளைத்தவர்களும் ;

(3) ஊசலில் கனலாய் எரி காளையர் - ஊஞ்சல்போல் (வருதல் போதலான வாழ்வில், காமத்தால், பிறவற்றால்) கனன்று எரிந்து கொண்டிருக்கும் ஆடு மாடு போன்ற ஆடவர்களும் ;

(4) மறையோர் ஊர் தனக்கு இடரே செயும் ஏழைகள் - அந்தணர்கள் வாழும் (அருமைக்) கிராமங்கட்கு, அளவிலாத தீமைகளையே விளைவிக்கும் அறிவு சூன்யம் ஆனவர்களும்;

[ஊர் - அக்கிரரம் எனபது குறிப்பு ஏழைமக்கள்-மந்தமதியினர்.]

(5) ஆர் தனக்கும் உதாசின தாரிகள் - எவரையும் அலட்சியப் படுத்தி அவமதிக்கும் அக்கிரமஸ்தர்களும்;

ஏதேதோ சாதிக்க எண்ணி, நினைவுகளை
ஏதம் பெறஎழுப்பும் என்பாவம் தீராதோ?

(6) ஓடி உத்தமர் ஊதியம் நாடினர் - பண்புடையர் ஊதியத்தை, விரும்பிப் பங்கிட விரைபவர்களும் ;

(7) இரப்போர்க்கு ஏதும் இததனை தானம் இடாதவர் - யாசிப்பவர்கசு, ஒரு சிறிதளவாயினும் தானம் வழங்க நினையாதவர்களும் ;

(8) பூதலத்தில் ஓரமது ஆனவர்கள் - உலகில், ஒருதலைப் பட்சமாக உரையாடுபவர்களும் ;

(9) ஈசர் விஷ்ணுவை சேவை செய்வோர்தமை இகழ்வோரும் - சிவத்தை, திருமாலைச் சேவிக்கும் அன்பர்களை இகழும் இழிநிலை யுடையவர்களும் ;

(10) ஏக சித்த தியானம் இலாதவர் - ஒருமை மனங் கொண்டு (இறைமையை) உணர்தல் இல்லாதவர்களும் ;

(11) மோகம் உற்று போக இதம் ஊறினர் - மோகமே மிகுந்து, போக சுகம் ஒனறிலேயே புழுஙகியவர்களும் ;

ஈனா இத்தனை பேர்களும் - இழிந்த ஒழுக்கம் உள்ள இந்த ஏகாதச துஷடர்களும் ;

ஏழ் நரகு உழல்வாரே - ஏழு நரகங்களில் விழுந்து புரண்டு வேதனை எய்துநர் ஆவர், (எ - று.)

விரிவுரை.

ரரரர எனறு சுழன்று ஆடும் குடைக் கூத்தும், டுடுடுடு என்று உடுககை ஒலித்து ஆடும் துடிக்கூத்தும், குமரன போர்க் களததில் கொள்பவை.

வீர்ய சித்திர சேனன் விண்ணப்பிததபடி, ஆலவாய் சொக்கரது அறுபான் மும்மை ஆடல்களையும், ஆடல் மேடை அனுபவமபோல்,செவ்வேள் பரமன் ஆடிக் காட்டிய செய்தியும் உளது.

வரதன் திருததாளில வை அகததை! உய்வை;
சரதமென, வையகம் தன்பெயர்சொல் கின்றதுவே.

சிருங்கபேரபுரக் குகன் சிந்தனே நிறைவுற, வீரவாகுவை இளையவனுக்கி, வள்ளியைச் சீதையாக்கி, தாமே இராமனுகி, இராமாயண முழுதையும் ஆடிக் காட்டிய வரலாறு ஒன்றும் உண்டு.

"குருகு நிலவு கோடை சூடி
முருகன் நடனம் ஆடுமே
முருகன நடனம் ஆடும் மோதம்
கருதும் அடியார் காணுமாறு கடுகியே"

என்று, திருவலங்கல் நூல் தெரிவிப்பதுபோல், அன்பர்கள் முன் வந்து முருகன் ஆடும் நடனம் ஒனறுண்டு.

இவைகளுடன், இதய குகையில் இருந்து செய்யும் இன்ப தாண்டவம் ஒன்றுண்டு. அந்த அசைவு ஒவ்வொன்றும், அளவிறந்த தாள பேதங்களாக அமைவன.

ஊன்றி அவைகளே உணர்வார்க்கு, இவைகள் வெறும் சப்த ஜாலஙகள் அல்ல; சொரூப தடத்த லட்சணம் சொல்லும் மந்திர நாத பொருட் குறிபபுகள என்று, புரிநது கொள்வது மிக எளிது. வாய்ப பந்தல் வேறு; சாதகானுபவம் வேறு.

இந்த ஆடல்களுள், அநாதி நித்தியமான ஆடல் ஒனறு. அது, 'சேகு சித்திரம ஆக நின்று ஆடுவது.' சேகு - வயிரம் ஏறிய திருவுருவம்; அலலது ஆடலின உரத்தை அறிவித்த அடை எனலுமாம். சித்திரம் ஆக நின்று ஆடல் - நிழல படம் போல், உயிரின் உணர்வுள் அருளாடல் நிகழ்த்துதல்.

இநநுடபம், "இத்தாரணிக்குள்" எனும் பழநித் திருப் புகழில், "ஆவி சுற்றும் ஒளியாகி"; "அடியவர் ஆவிக்குள் நினறு உலவி வரு பெருமாளே!" எனறும் உணர்த்தப பெற்றுளது.

வாழும் திருவடியை, நெஞ்சகத்தில் வைக்காமல்,
சூழும் வினேயில், சுழலவைதத தென்னேயோ?

இச்செய்திகள், ஓதத் தருவதல்ல; சாதகர்கள் உணரத் தகுந்தவை. தப்பித் தவறி ஓத நேரில், சொற்கள் தடைப்படும். இன்றேல் குழறுபடியாய்விடும். நின்று என்பது நிண்ணு எனவாகி, அதுவும் ஈறு கெட்டு, 'நின் ஆடிய பெருமானே' என ஆதல் இங்கு அறியத் தகும். புரிந்துகொள இந்த ஒரு அனுபவம் போதாதோ?

அவன் ஆட, அகில சராசரங்களும் ஆடுதலே, 'அதல சேடனுர் ஆட' எனும் பாடல் கொண்டும் அறிந்துளம். அதே செய்தி, பெருமான் நிண்ணு ஆட, தாத தத்தத என ஆரம்பித்து, ஜே எனப் பலர் ஆடுதலையும் இங்குப் பார்க்கிறேம்.

அந்த ஆசிலாக கலையைப், பலகாலமாக ஆய்பவர் ஞானியர். ஆய்ந்து தெளிந்தபின், அரிய இப்பேற்றை மற்றவரும் அறியுமாறு, பழுத்த அனுபவமான இவைகளைக் குறித்து அவர்கள் வாய் பாடும். பாடும் பாக்களின் சொல் மாலையை, மகிழ்ந்து சூடிக் கொள்ளும் அநதப் பரன்.

'மாகலை ஆயும் உத்தமர் கூறிடும் வாசக!'

என்று, ஆடுவார் ஆட ஆடிய ஆடலையும், சொல் மாலை சூடலையும் உணரும் உள்ளம் நெகிழ்கிறதே!

எதையும் கற்பிப்பது எளிது; தொகையாக எதையும் தொகுத்துக் கூறி, வகை வகையாக அவைகளை வகுத்துக் காட்டி, விளக்கம் பல வெளிபபட விரித்துக் கூறுதல் ஓதுவித்தல் எனப் பெறும். சொல்வது, கூறுவது, உரைப்பது, பேசுவது என வரும் ஒவ்வொன்றும், வேறு வேறு பொருளுடையன. வேதம் ஓதுதல போன்ற வழக்காறு கொண்டும், ஓதுதல் எனும் சொல்லிற்கு உயர்ந்த பொருள் இருத்தலை உணர்வம். ஓதப் படுதலின, வேதத்திற்கு ஓதது என்று ஒரு பெயருளது.

உயர்ந்தோர் எனும்பொருளில், உள்ள(து) உலகம்;
அயர்ந்தேன் துரையே! அதையறிவித்(து) ஆளாயோ?

ஓங்கார சொரூபத்தை முதலில் தான் ஓர்ந்து, அதன்பின் பிறர்க்கு ஓத உரியது ஓத்து. இவ் விளக்கங்கள் யாவும், பழங்கால உரைகளில் பரவி யிருக்கின்றன.

ஓதும் வித்தையை, உணர்வில் பதிபபவர் ஓதுவிப்பவர்; உணவு ஊட்டினுல், உடல் வளரும்; ஓதுவித்தால், தூய உணர்வு பெருகும். "ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்." ஓதுவித்தவர்க்கு ஆரம்பததிலும், இடையிலும், இறுதியிலும் காணிக்கை அளிதது, பாடத்தை நிறைவு செய்வது பழைய நிலை. இவர்க்கு யாது கைம்மாறு செய் தாலும் ஈடாகாதே என்று எண்ணி,

"ஏதமற்ற குரவற்கு இரணியம்
போதும் என்னப் பொழிந்தனன் கொண்டல்போல்"

என்று, குருகாணிக்கை கொடுக்கும் ஒரு வரலாற்றை குமார தேவர் சாஸ்திரம் கூறுகிறது.

சிறந்த அக் குருவிற்குச் சிரமதானம் கூட செய்வதில்லை சிலர் எனில், இது நியாய விரோதம் அல்லவா!

ஊதியம், வருவாய், சனமானம், பரிசு, காணிக்கை என வரும் சொற்கள், பெறுமவர் தரத்திற்கு ஏற்றவாறு பேர் பெறும். இங்கே பேசுவது கூலி. இது, மாடுபோல் பாடுபட்ட ஏழை ஒருவன பெறுவது; குருநாதர்க்கு அதுதானும் கொடாத ஒருவன், என்னகதி யடைவான என்பது சொல்லியா தெரிய வேண்டும்?

"முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்றார் வள்ளுவர். அக் கூலிதானும் பெற்றிலர் குரு நாதர். குருவை வஞ்சித் தார வாழ்க்கை, இவ்வுலகிலேயே இருளடையும்; இறந்த பின்னரோ நரகந்தான்.

சிவத்தை இடையறாது சிந்தித்து, உணர்வு தாவி மேல் ஏறுவது தவம் எனப பெறும். ஓதியவைகளை உணர்ந்து ஒழுகு

காசிற்கே என்றும் கலகலதத வாழ்க்கையரை,
மாசிற்கே ஆளா, மதிமயக்கும் காசினியே.

வோர், மாதவ வாழ்வாம் மணம் காண்பர். அவர்களைப் பின் பற்றினால் அமைதி பெறலாம்; வாழும் முறை யறிந்து வாழலாம். அதற்கு மாறாக, அவர்கட்குப் பாதக சாதகம் பண்ணினனர்க்கு, கடுமை நரகம்தான் கதி.

எங்கேயோ பிறந்து, எங்கெங்கேயோ அலைந்து, ஊசலாடும் இந்த ஊனமான வாழ்க்கைப் போக்கை உணர்ந்து, அருளாளர் சார்பெய்தி, அவர்கள் மூலம், மதி நடுவில், விதியும் அறியாத விளக்கேற்றிக் கொள்ளும் வினயமிகு பருவத்தில், கண்ணினும் கருத்தினும் காமம் கனல, வாக்கு வறள, ஆக்கை தளர, வீணாகத் தன்னை விரையம் ஆக்குவார்க்கு, இம்மையிலும் சுகமில்லை; மறுமையிலும் நலமில்லை. நரகந்தான் காணும் நடை. அட பாவமே!

ஓதினர். ஓதிய வழியே ஒழுகி மாதவர் ஆயினர், அமைதி காண, எவரோடும் ஒட்டாது பற்றறுது ஒதுங்கி, அக்கிரகாரம் எனும் தனியிடத்தில் அமர்ந்தனர். உலகில் இவர்களே உத்தமர்கள். சிந்திக்கலாம்; அத்தகையரைச் சேவிக்கலாம்; இத் தர்மத்தை மறந்து, அமைதியான அக்ரகாரத்திற்குச் சென்று, அசுத்தம் செய்து அவைதிகம் பேசி, இடர்ப்பாடு செய்வாரும் உளராயின், அவர்கட்கு யாது கதி? சொல்லித்தான் தெரியவேண்டுமா? சிவ சிவ சிவ.

அறிவுத் திரு வறண்ட தரித்திரர் என்று, இவர்களை அறிவிக்கிறார் நம் முனிவரர்.

எவரையும் ஏதாயினும் குறை கூறிக்கொண்டே யிருப்பது, பொல்லாத ஒரு சிலர் பொழுது போக்கு. தீமைகளையே பேசிப பேசித், தீய்ந்து போகும் இவர்களே தீயவர்கள். அருமையாக மதிக்கத் தக்கவர்களை, அலட்சியம் செய்யும் இவர்கள் கதியும் அதோகதிதான.

மேதா விலாசம் இருண்டுள்ள மேதினியில்,
நாதா! இருத்தற்கு நாணுகின்ற(து) என்னுளமே.

நல்லவர் தம் போக்கில் நடமாடுகின்றனர். உழைக்கின்றனர். அவல ஊதியம் கிடைக்கிறது. எளிய வாழக்கையில் இருக்கும் அவர்கள் இடத்தைத் தேடி யடைகின்றார் சில தீயவர்கள். பலாத்காரம் செய்து, அதைப் பறித்துக் கொள்கின்றனர். ஏழைகள் தலையில் கை வைக்கும் இவர்கள், எவ்வளவு காலந்தான் வாழ முடியும்? படபடத்த நரகந்தான் இவர்கட்குப் பதிலளிக்கும்.

விளை நிலத்தில், இருமரக்கால் நெல்லை விதைத்தவர், அறுவடைக் காலத்தில் இரு வண்டி நெல்லை அறுப்பர். அது போல் தக்கவர்க்குச் செய்த தானம், அளவிறந்து பெருகி ஆக்கம் அளிக்கும்.

" ஞானம் உன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே "

என்று, சிறுதுளி பெருவெள்ளமாகிப் பயன்தர வரும் இடத்தைப் பாடுகின்றார் கம்பர். ஏற்பது என்பதே தொழிலாக, இருக்கின்றார் சில்லோர். அவர்கட்கு இயலும் அளவு தானம் செய்வது தகுவது. உதவ சூழ்நிலை இருந்தும், உலோபத்தில் சுழிப்பாருளர் எனில்,

" இரப்பவர்க்கு ஈய வைத்தார்; ஈபவருக் கருளும் வைத்தார்;
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார் "

என்று அபபர் பெருமான் அருள்வதுபோல், நரகந்தான் அவர்க்குக் கிடைக்கும் நற்பரிசு.

நியதி நிறைவது நீதி எனப் பெறும். நியதியின் நடுவில் இருக்கும் யகரமே ஆன்மா. அந்த ஆன்மா தேடும் நிதியே நீதி எனப் பெறும். தமக்கு வேணடியவர் பெறுவது வெற்றி; வேண்டார் பெறுவது தோல்வி. இப்படியாக இவர்கள் ஒரு பட்ச சார்பில் உறவாடலாமா? எதிலும் துலாக்கோல் போல்

மணத்தை மலருள் மகிழவைததாய்; நல்ல
குணத்தை, எனதுளத்திற் கொள்ளவைத்தால் ஆகாதோ?

இருக்க வேண்டாவா ? ஒரு புறமாக ஒதுங்குவது ஓரம் போம் நடை.

சர்வ ஐஸ்வர்ய சம்பன்னன் ஈசன் ; சர்வ சாட்சி மாத்திர மாக, எங்கும் விளங்கி யிருப்பவர் விஷ்ணு. 'திருமாலைப் போற்றி வாழ் !' 'சிவத்தைப பேணில் தவத்திற்கு அழகு' என்பர் மேலோர். இதனை அறிந்து, சிவசிவ என்று சிந்தித்து, ஹரிஹரி என்று வந்திபபர், அருள் நெறி பயிலும் நடையினர்.

சிவன ஏறுவது எதன் மேல் ? இருக்குமிடம் எது ? பூசுவது யாது ? புனைவது என்ன தெரிகிறதா ? எனறும், கோபிகா லீலையும், வாலி வதையும் புரிகிறதா? சிவ சிவ என்று பட்டினி கிடப்பவர் சைவர் ; அறிதுயில் என்று உறங்கி இருப்பவர் பாகவதர் என்றும், கோணை புத்தியால் குறுக்கும் நெடுக்கும் பேசும் இவர்களுக்கு, இந்த உலகில் இல்லை யிடம். நரகமே தான் நல்ல நிலம்.

பலவற்றில் மனம் படர்ந்தால், எப்புறமும் ஏக வேதனைகள் எய்தும். ஒருமை மனம், அமைதி யின்பத்தை அளிக்கும். இந்நிலையர், தியானத்தில் ஊறித் தெய்வமே ஆய்விடுவர். இந்த ஈடுபாடு இல்லாதார், பேயாய் இருந்து பிதற்றித் திரிவர். இவர்களும் நரகமே எய்துவா.

மொகு மொகு என்று, மாதர்மேல் கொண்ட மோக தாகிகள் பலர் ; அதன சார்பில் ஆர்வம் பெருகி, தேகமே ஆத்மா ; போகமே முத்தி என்று இவர்கள் புலம்பி வழிவர். மோக போகம் ஊறி ஊறி, முடி சாய்ந்து போவர். இருநது கெடுத்தான ; இறந்தும் கெடுத்தான் எனபது போல், எழுதி வைத்த தம் எழுத்தாலும், பேசி வைத்த தம் பேச்சாலும், எதிர் கால மக்களையும் குட்டிச சுவராக்கிய இநதக் குட்டிச் சாத் தான்களை, ஏதேது செய்வானோ அநத எமன் ?

அறிவிற் கறிவாய் அமர்நதவுனை, நட்ட
தறிபோல் இருந்தால், தழுவவரு கின்ருயே.

இப் பதினொரு துஷ்டர்களும், நாட்டைப் படுகேடு செய்தனரே ; செய்கின்றனரே ! இவர்கள் ஏழு வகை நரகில் என்ன என்ன பாடு படுவரோ ? பிரபோ ! வருங்கால மக்களேனும் அமைதியொடு வாழ, அருளாடல் மூலம் அறிவுதா ! அமைதிதா என்று, வீரிட்டுக் கதறி விண்ணப்பித்தபடி.

அருளாண்மை மனமுள ஸ்ரீ அருணகிரி நாதர் திருவுளம், உலகியல் கீழ்களை எண்ணி எவ்வளவு ஏங்குகிறது என்பதையும், வாயாலும் சொல்லக் கூசும் சப்த நரகச் சாக்கடையில் எப்படி எப்படி ஏங்குவர் என்பதையும் சிந்தனை செய்து, அருளாகரா ! அளவிறந்த ஆடலரசே ! உன் திருவிளையாடலால், இன்னோரைத் திருத்தி உய்விததால் ஆகாதா? என்று, உணர்ந்து வேண்டும் உள்ளங் கொண்டு ஓதிய பா இது !

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

சண்முக கவச விளக்கம்.

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

ஈசனும் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள்விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீராறு ஆயுதன் காக்க, என்றன்
ஏசிலா முழங்கை தன்னை எழில்குறிஞ்சிக்கோன் காக்க.

அருஞ்சொல் :

ஈசன் - ஐசுவரியவான் (அருட்செல்வன்). வாகுலை - கார்த்திகை. வாகுலேயன் - கார்த்திகை மகளிர் மகனை கார்த்திகேயன் (முருகன); கந்தரம் - கழுத்து; தேசு - தேசசு - ஒளி; ஆசு - குற்றம்; ஏசு - இகழ்ச்சி; எழில் - பொங்கிய பேரழகு; குறிஞ்சிக்கோன் - மலைநிலக் கடவுள் (சேய்).

இடையாடிக் கன்மம், எழுநது குதித்தாலும்,
நடையாடும் நினனருளை, நான்மறக்க மாட்டேனே.

விளக்கம் :

அறுமுகச் சிவஞான கார்த்திகேயன் எனது கழுத்தைக் காத்தருள்வானாக; ஒளி மிகும்படி தோள்களையும் விலாக்களையும் இலக்குமியின் மருமகனான முருகன் காக்க; என் மார்பைப் பழுது எதுவும் இல்லாதபடி பன்னிரு படைகளை ஏந்திய பரமன் காத்தருள்வானாக. என் முழங்கைகளை (வளைதல், அளவிலும் உருவிலும் குறைந்திருத்தல் முதலிய விகாரமுடையன என்று எவரும்) இகழாதவாறு பேரழகு மிக்க குறிஞ்சி வேந்தன் காத்தருள்வானாக.

விசேடம் :

ஈசன் - சென்றடையாத அருட்செல்வன்.

வாகுலேயன் - வாகுலை - கார்த்திகை. 'பாஹுலேயன்' என்ற வடசொற்றிரிபு. ''கார்த்திகை மாதர் குறைபாடுற்று நோற்ற நோன்பில் அவர்கள் காதல் மைந்தனாய்க் கருதிநின்ற கருத்தன'' என்க.

தேசுறு தோள் விலாவும் என்பது, ஒளிவிளங்கும் தோள்கள், விலாக்கள் என்று பொருள்படு மெனினும், தேசுறு (மாறு) - ஒளி விளங்கும்படி என்று கவச மரபுக்கேற்பப் பொருளுரைககப்பட்டது.

திருமகள் மருகன் - இலக்குமியின மகளிரான இருவல்லியரை இறுகத் தழுவும் ஈராறு தோள்களுடைய மருகன் என் இருதோள்களைக் காக்க என்ற பொருத்தம் காண்க.

ஈராறு ஆயுதன் :

சூர சம்மாரத்திற்கு குமரவேளை அனுப்புவதற்கு முன்னர், உமாபதி பதினொரு உருத்திரர் வடிவான பதினோராயுதங்களையும் வெற்றிவேற் படையையும் உதவினார். அவற்றைச் சிவ

எங்கொளகை தனனில் இருஎன்றே, ஈாக்கினற
மஙகுவார் போக்கில், மயங்குவதும் ஆகாதே.

குமரன் தனது பதினொரு கரங்களிலும் தரித்து வேலாயுதத்தை வலத்தோளில் அணைத்துக் கொண்டனன். பதினொரு படைகளாவன :—

(1) தோமரம் (எறியீட்டி). (2) துவசம். (3) பெரிய கத்தி. (4) வச்சிராயுதம். (5) அம்பு. (6) அங்குசம். (7) கண்டை. (8) கமலம் (தாமரை வடிவமான படை). (9) கோதண்டம். (10) பிராசம் - ஈட்டி (இறகம்பு என்றும் கூறுவர்). 11. பரசு (மழு). இவ்வரிசை வடமொழிக் காந்தத் தின்படி உரைக்கப்பட்டது. 'பிராசத்திற்குப் பதிலாக' தண்டம் என்று தென்மொழிக் காந்தம் செப்புகின்றது. வேறும் பல கூறுவர். இவற்றின் தத்துவ நுட்பங்களைப் பாம்பனடிகளாரின் 'ஸ்ரீசுப்பிரமணிய விலாசத்'தில் காணலாம்.

மார்பை....ஈராறு ஆயுதன் காக்க :

பகைவர் படைகொண்டு தாக்கும் இடம் மார்பு. அதனைக் காக்க வல்லான் பன்னிராயுதனே என்றார்.

குறிஞ்சிக்கோன் :

குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த நிலமுமாம். இந் நிலக் கடவுள் சேயவன்.

''சேயோன் மேய மைவரை யுலகமும்''

—(தொல்காப்பியம்)

எனவே, மலைச்சாரலிலுறையும் இறைவன் எனக் கொள்க. பரங்கிரி, செந்தில், பழநித் திருவாவினன்குடி, சுவாமிமலை, பலமலைகளுமாகிய குன்றுதோறாடல், திருச்சோலைமலை ஆகிய ஆறுபடை வீடுகளான மலைத் தலங்களிலும் எழுந்தருளியுள்ள தலைவன என்றும் கூறலாம். அண்ணாமலையின மகன, மலை மகள் மைந்தன, மலையிடித்த மாவீரன, மலை (வாழ்குற) மகள்

சொல்லாடும் சூழ்சசியினிற, சொக்கவைபபார் கூட்டத்துள், மல்லாட நானறியேன, மாதேவா காவாயே.

மணாளன் ஆதலின், குகவேள் மலைநிலத் தெய்வம் என்னற்கு ஐயமுண்டோ?

''குறிஞ்சிக் கிழவனென் றோதும் குவலயமே''
''குறிஞ்சி வாழு மறவர் நாயகா'' (அருணகிரி)

குறிப்பு :

இப்பாட்டில் ''ஆசிலா'' ''ஏசிலா'' என்பவற்றை ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு பொருள் காண்பதைவிட, 'ஆசிலாது' 'ஏசிலாது' எதிர்மறை வினை *எச்சமாகக் கொண்டால் பொருள் சிறப்பது* கருதுக. ஏனெனில், ஆசு இலாத மார்புக்கும், ஏசு இலாத முழங்கைக்கும் காப்பு வேண்டிய அவசியமில்லை. 'காக்க' என இறைவனை வேண்டுவதில் அர்த்தமில்லை. நோய் வந்தபோது தான், அதுதீர மருந்து தேவைப்படும். மார்பும், தோள்களும் எவ்வித குறைபாடும் நேராமல் காப்பு வேண்டுவதே கவசத்தின் முக்கிய கருத்து என்பதும் நினைக்கத் தக்கது. இம் மரபுக் கேற்பவே மேற்கூறிய உரை கொள்ளபபட்டது. கூடிய வரையில் கவச இலக்கணம் பொருந்த உரைகாண்டலே சிறப்பு என்க.

அநுபூதி விளக்கம்

யமனுக்குப் பாதுகாப்பு

(கி. வா. ஜ.)

யாரோ கொடியவன் குழந்தையைப் பயமுறுத்தித் துரத்திக் கொண்டு வருகிறான். குழந்தை, ''அம்மா, அம்மா'' என்று கதறிக் கொண்டு ஓடி வருகிறது. நல்லவேளை, அதன் தாய் வழியிலே நிற்கிறாள். குழநதை ஓடிபபோய்த் தாயின்

ஞாலத்தின் வாசனையால், நம்பா! நினைமறந்த
கோலத்தார் கூட்டம், ஒருநாளும் கொள்ளேனே.

இரண்டு கால்களையும் கட்டிக்கொண்டு கதறுகிறது. இனி அந்தக் குழந்தைக்குப் பயம் இல்லை. வந்த முரடனும் குழந்தைக்குப் பாதுகாப்பு இருப்பதைத் தெரிந்து கொண்டு ஓடி விடுகிறான்.

ஒருவகையில் நாம் அந்தக் குழந்தையின நிலையில்தான் இருக்கிறோம். நம்மைத் துரத்திக் கொண்டு வருகிறவன் எமன். ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல அவனுக்கும் நமக்கும் இடையே உள்ளதூரம் குறுகிக் கொண்டே வருகிறது. ஒவ்வொருநாளும், நம்முடைய உயிரைச் செதில் செதிலாகக் குறைத்துக் கொண்டே வருகிறதாம். வள்ளுவர் அப்படிச் சொல்கிறார்.

" நாள்என ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்."

ஆகவே காலன் நம்முடைய வாழ்க்கையாகிய சாலையில் நம்மைத் துரத்திக் கொண்டே வருகிறான். நாம் அவன் கைப் படாமல் ஓடிக்கொண்டே இருக்கிறோம். எத்தனை காலம் இந்தப் போராட்டம் நடைபெறும் என்று நமக்குத் தெரியாது. சிலர் விரைவில் அவன் கையில் அகபபட்டுக் கொள்கிறார்கள். என்ன முயற்சி செய்தாலும், எத்தனைப் பொருளை ஈட்டினாலும், எத்தனை கல்வியைக் கற்றாலும் அவன் கையில் அகபபடாமல் தப்பிவிட இயலாது.

அந்தக் குழந்தை அம்மாவை நோக்கி ஓடியது; காரணம், தன்னைப பிடிகக வருகிறவனைக் கண்டு அஞ்சியது. நாம் அந்தக் குழந்தையைப் போல இருந்தாலும் பலவகையில் அதைபபோல இருக்கவில்லை. அது தாயை நோக்கி ஓடுவது போல நாம் யாரையும் நோக்கி ஓடுவதிலலை. அது முரடனைக் கண்டு அஞ்சுகிறது. நமக்குக் காலன் கண்ணிற் படுவதில்லை;

இதய குகையுள் இருக்குமுனை எண்ணுனர்கள்,
மதவெறியால் போர்நிகழ்த்தி, மல்லாட மாட்டாரே.

ஆகையால் அவனைப்பற்றிக் கவலைப்படாமலே பிரபஞ்ச வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

பறவையைப் பிடிக்கும் வேடன் மறைந்து நிற்பான். கையில் வலையை வைத்துக் கொண்டு,பறவை வாகாக அருகில் வரும்போது வலையை வீசிப் பிடித்து விடுவான். அதற்குமுன பறவைக்கு வேடன் இருப்பது தெரியாது. நாமும் அப்படித் தான் இருக்கிறோம். காலன் நம் கண்ணுக்குப் புலபபடுவதில்லை. சரியான காலத்தில் அவன் பாசக் கயிற்றை வீசுவான. அப் போதுதான உயிர்கள் உண்மையை உணர்கின்றன.

காலனிடத்திலிருந்து தப்பவேண்டுமானல் என்ன செய்ய வேண்டும்? முன்னே சொன்ன குழந்தை தாயை நோக்கி ஓடியது போல நாமும் ஓடவேண்டும். காலனுடைய பயத்தி னின்றும் நம்மைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற துணையாக இருப்பவன் இறைவன் ஒருவன்தான். அவன் காலைக் கட்டிக் கொண்டு விடாமல் இருந்தால் காலன் வந்த வழியே போய்விடுவான். அவன் பாசம் நம்மைக் கட்ட இயலாது.

இந்த உண்மையை அநுபூதியில் அருணகிரிநாதர் குறிப்பிக்கிருர். முருகனிடம் தம் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கி ருர். அங்கே இந்தக் கருததுப் புலப்படுகிறது.

நன்ருக வாழும்போது யமன் ஒருவன் இருக்கிருன் என்ற நினைவே நமக்கு இருபபதில்லை. நாம் அவனை மறந்தாலும் அவன் நம்மை மறபபதில்லை. அவன் காலம் பார்த்துக் கொண்டே இருக்கிருன். அவன நம்மை அணுகும்போது தான், உடலினின்றும் போகமாட்டாமல் தத்தளிக்கிறோம். மரணவஸ்தையில் அலமந்து அல்லற்படுகிறோம். யமன் வந்து கலகம் செய்கிருனும். அமைதியான வாழ்க்கையி னிடையே புகுந்து துயரத்தை உண்டாக்குகிருன். அந்தச்

கண்ணொளியில் என்-றும் கலந்த கடவுள்!நின்
விண்ணொளியை நோக்க,விளக்கொன்றும் வேண்டாவே.

சமயத்திலே வந்து காக்கவேண்டும் என்று முருகனை வேண்டு கிறார் அருணகிரியார்.

உடம்பினின்றும் உயிர் போகும் போது அந்த நிலையை மரணம் என்று சொல்லுகிறோம். உடம்பில் வாழும் எல்லா உயிர்களும் ஒருகாலத்தில் மரணம் அடைவது உறுதி. உடம்பினின்றும் உயிர் பிரியும் திறத்தில் இரு வேறு வகை உண்டு. இறைவனுடைய திருவருளைப் பெற்று வாழும் பெரியவர்களும் இறந்து போகிறார்கள்; மற்றவர்களும் இறந்து போகிறார்கள். இரண்டு வகையினர் திறத்திலும் உடம்பை விட்டு உயிர் பிரிவதில் வேறுபாடு ஒன்றும் இல்லை.

ஆனால் உயிர் எங்கே போகிறது என்பதில்தான் வேறு பாடு இருக்கிறது. இறைவன் அருள் பெற்றவர்கள் நேரே இறைவன் திருவடியாகிய பேரின்ப வீட்டை அடைகிறார்கள். மற்றவர்கள் சொர்க்க நரக வாழ்வைப் பெற்று மீட்டும் பிறக் கிறார்கள். சிறையினின்றும் விடுதலை பெற்று வீட்டை அடை பவர்களைப் போன்றவர்கள் அருளாளர்கள். ஒரு சிறையி னின்றும் விடுபட்டு மற்றொரு சிறைக்குப் போகும் நிலையில் உள்ளவர்கள் மற்றவர்கள். இருவகையினரும் சிறையினின்று வெளிப்படும் திறத்தில் ஒரேமாதிரி தோற்றினாலும், சென்று சேரும் இடத்தினால் வேறாக இருக்கிறார்கள்.

மரணம் என்பது, இறந்து மீண்டும் பிறப்பவர்கள் உடம்பை விட்டுச் செல்லும் நிகழ்ச்சி. உடம்பினின்றும் சென்று, வேறு எந்த உடம்பிலும் புகாத நிரந்தர விடுதலை பெற்ற அருளாளர்கள் மரணம் அடைவதில்லை; அவர்கள் பரிபூரணம் அடைகிறார்கள். இடையீடின்றி என்றும் மாறாமல் நீடுவாழும் உலகத்தை அவர்கள் எய்துகிறார்கள். அவர்கள் மறைந்தால் அந்த மறைவை சாவு என்றோ, மரணம் என்றோ சொல்லக் கூடாது; அது சாகாத வாழ்வு, மரணமிலாப் பெருவாழ்வு.

அமைதி நிறையுளத்தில், ஆநந்த! நின்னைச்
சிமையமெனக் கண்டு, சிரிக்கினறார் மேலோரே.

''என்னைச் சாகாதபடி அருள்தந்து காப்பாற்ற வேண்டும்'' என்று முருகனை வேண்டுகிறார் அருணகிரிநாதர். ''யமன் வந்து கலகம் செய்யும் போது உன் திருவடிகளிலே புகுத்திக் கொண்டு என்னைக் காப்பாற்றுவாயாக!'' என்பது அவர் பிரார்த்தனை

சாகாது எனையே, சரணங் களிலே
காகா, நமனார் கலகம் செயும்நாள்.

'சாகாமற் காக்க வேண்டும்' என்றார், மரணமிலாப் பெரு வாழ்வை அருளவேண்டும் என்ற எண்ணத்தோடு. இறைவனுடைய திருவடிகளே மீண்டும் பிறவாத நெறியைத் தரும்; சிறை மாற்றத்தைப் போன்ற மரணத்தை அடையாமற் காப்பாற்றும். இந்த உடம்போடு வாழும் போதே இறைவனுடைய சரணங்களைப் பற்றிக்கொண்டால் யமனுடைய வாதனைக்கு இடம் இராது.

நாமாக முயன்று இறைவன் திருவடியைப் பற்றிக் கொள்வது அரிது. ''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' என்பது திருவாசகம். அவன் தன திருவடியைப் பற்றிக் கொள்ளும் வழியைக் காட்டியருளினால் நாம் அவற்றைப் பற்றிக் கொள்ளலாம். ஆதலால் அவன் தன் திருவடிகளிலே புகுத்திக் காப்பாற்றி யருளவேண்டும் என்று வேண்டினார்.

மற்றச் சமயங்களில் நன்றாக வாழ்ந்தாலும், இறப்பு நேரும் போதுதான் பாதுகாப்பு வேண்டும். யமன் வந்து கைப்பற்றும் போது, அரணமாக முருகன் தன் திருவடிகளைக் காட்டி யமனிடமிருந்தும் நம்மை மறைத்துப் பாதுகாக்க வேண்டும்.

''என்றோ யமன் வரப்போகிறான்; அதற்காக இப்போதே என்ன கவலை?'' என்று சும்மா இருக்க முடியுமா? அவன்

மல்லிகையில செம்மை மணமிருத்தல் போல்,உன்னைப்
புல்லுநர்தம் பொன்னுரையில், தெய்வமணம் பொங்குமரோ.

எப்போது வருவான் என்பது யாருக்கும் தெரியாது. வருமுன் காப்பதே அறிவாளிகளுக்கு அடையாளம். ஆதலால் நன்றாக வாழும் போதே, யமன் கலகம் செய்யும் நாளில் மரணம் என்ற விபத்து நேராதபடி, முருகன் காப்பாற்ற வேண்டும் என்று அருணகிரியார் பாதுகாப்புச் செய்துகொள்கிறார்.

சாகாது எனையே சரணங் களிலே
கா; கா, நமனார் கலகம் செயுநாள்.

யமனை நமனார் என்றார். இழிவாகச் சொல்லும் போதும் இப்படிச் சொல்வதுண்டு. சொன்ன பேச்சைக் கேட்காத பையன் வரும்போது, "இதோ பெரியவர் ஊரில் பவனி போய்விட்டு வருகிறார்" என்று தந்தை சொல்கிறார். மரியாதையாகச் சொல்வது போலச் சொல்லளவில் இருந்தாலும் இழிவைக் காட்டும் சொற்கள் அவை. இதுவும் அத்தகையதே

சித்தர்கள் சிறப்பு 25

பழைய வாசனை

[ரஸபதி]

தனமதி எனும் துணைவியுடன் தர்மார்த்தர்; சுகமதி தேவியுடன் சூரசேனர்; இவர்களது அண்ணி வைதவ்ய குணமதி. இந்த ஐவரும் வேந்தர் மரபினர். அரசை வெறுத்தனர். அமைதியை விரும்பினர். சதுரகிரியைச் சார்ந்தனர். காடுகள் பலவற்றில் காய்கனி யருந்தினர். அகத்தியர் வனம் எனும் ஒரு பகுதி, அம்மலையில் இருந்ததை அறிந்தனர். தவக் கோலம் தாங்கினர். அங்குப் பல நாள் தங்கினர். குறு முனிவரைத் தரிசிக்க நினைத்தனர். அவர் சேவை அவ்வளவு சுலபம் அல்ல என்பது, அவர்கள் அறிந்ததுதான். நம் நினைவு

பாரில் நினையன்றிப் பக்கத் துணையில்லை;
நேரில் எனையேற்க, நீயுறுதல் எந்நாளோ?

எப்படியும் நிறைவேறும் என்பது, அவர்கள் நம்பிக்கை. காலம் பல வீணே கரைகிறது. கருதினர். கண்ணீர் சிந்தினர். கலங்கி யிருந்தனர்.

அவர்கள் மன நிலையை, அந்த அருந்தவர் அறிந்தார். இரக்கம் கொண்டார். எதிர் வந்தார். தாழ் சடையும், குறு நகையும், குறட்டின் மேல் வைத்த பாதங்களும் ஆன அவர் கோலம் கண்டதும், எழுந்த ஐவரும் விழுந்து வணங்கினர். அடியேம் உய்வழி அருள்க பிரபோ! என்று அழுது தொழுதனர்.

உங்கள் கருத்தை உணர்வோம். பேரறி வுடையது பிரமம். சிற்றறிவை யுடையவர் சீவர்கள். அறிவின் சிறுமையாலும், மாபெரும் பாசம் அந்த அறிவை மறைப்பதனாலும், பரம் பொருளைத் தரிசிக்க முடியாமல், ஏக கவலைகளை உயிர்கள் எய்துகின்றன.

இயற்கை இவைகளை அறிகிறது; உடல்களை உயிர்கட்கு உதவுகிறது. இந்த உதவியால், பருமையான உலகை, உயிர்களால் பார்க்க முடிகிறது. ஆயினும், ஆன்மாவாகிய தன்னையே அறிந்தது இல்லை; தலைவனையும் தரிசித்தது இல்லை. உய்ய வழியாது? உரைக்கின்றேம் கேளுங்கள்!

எதுவும் சிவம்; எவர் செயலும் சிவச்செயல்; இப்படியே இதய பூர்வமாக எண்ணி யிருந்தால், நினைவின் நிறைவும், நோக்கின் நிறைவும், வித்தகப் பேரறிவை விளைவிக்கும். அதன் பின், சிவமாகும் இந்தச் சீவன். அன்பின் பண்பு ஆரம்பம். அதன் பழுத்த பெருநிலையே அருந்தவம்.

மண்ணும் பெண்ணும் பொன்னும், இயற்கையின் மலர்ச்சிகள். மாபெரும் அவைகளை மறுப்பது பாவம். வீணாகக் காமித்து வெறி கொள்ள வேண்டா என்பதுதான், அருள்

வாஎன்பேன் நின்னை; வழிபாடும் செய்தறியேன்;
ஓஎன் றழுமென்சொல், ஒப்பாரி என்பாயோ?

நூற்கள் செய்த அறிவிப்பு. வனத்திற்குத் தவம் செய்ய வந்தீர்கள். ஐவரும் தனித்தனியே பர்ண சாலை அமைத்துக் கொள்ளுங்கள்! காய கற்ப சாதனையில் கண்ணும் கருத்தும் வையுங்கள்! ஓயாது ஐந்தெழுத்தை உருவேற்றுங்கள் என்று, அகத்தியர் அரிய பல முறைகளை அறிவித்தார்.

ஒரு வருடம் இடையில் உருண்டது. அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் எதிர் வந்தார். ஒரு வருடத்திற்கு மேல் ஒரே இடத்தில் இருந்தால், இருந்த இடத்தில் பந்தம் வரும். சாதகர்க்கு இது சரியல்ல. அடுத்திருப்பது போகர் வனம். சிறந்த அந்த இடத்திற்குச் செல்மினகள் என்று, அரிய தன் சீடர்களை வழி காட்ட அனுப்பினர்,

சென்றனர். போகரை வணங்கினர். அவர், அவர்கள் வரலாற்றை அறிந்தார். புன்னகை செய்தார். தவம் செய்வது நல்லது தான். இதன் வழியே சிற்றறிவு பேரறிவாகு லொழிய, சிவம் விளங்குவது இல்லை. குலத்தளவாகும் குணம் என்பர். நீங்கள் துறவு கோலம் கொண்டாலும், பழைய வாசனை, பல்லி ளிக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்!

எப்பற்றும் சுய நலத்தில் இல்லாமல் இருந்தால், நினைவு நிச்சயம் நிறைவேறும். தனித்தனி யிருந்து, காய கற்பம் கொண்டு, சிவத்தை எண்ணித் தவத்தைச் செய்யுங்கள் என்று, புனித ஆசி செய்தார் போகர்.

அவர் கட்டளைப்படி, ஐந்து பர்ண சாலைகளை அமைத்த னர். எண்ணித் தவத்தில் இருந்தனர். ஒருநாள் ஐவரும், அண்மையில் இருந்த பூஞ்சுனையில் நீராடப் போயினர்.

தன்மார்த்தன் மனைவி தனமதி, தான் அணிந்திருக்கும் கவின்மிக்க நவ கண்டிகையைக் கழற்றி, நேர் பார்வையான மேட்டில் வைத்து நீராடினள்.

வல்லாளா! யாவும் வழங்குதிரு வாளா!உன்
நில்என்னும் நுட்பம், நினைந்தொழுக மாட்டேனே!

பள பளத்தது மாலை. அதைப் பார்த்தது ஒரு கருடன். பறந்து வந்தது. அதைக் காலில் இடுக்கி எடுத்துச சென்றது. ஆலமரம் ஒன்றின் கிளையில் அமர்ந்தது. கொத்திப பார்த்தது. உணவு அல்ல அது என்று உணர்ந்தது. வெறுத்து நழுவ விட்டது. மண்ணில் விழுந்தது மாலை. பற்றற்றவர்கள்போல் கருடன, அதைப் பாராதே பறந்து சென்றது.

தனமதி நீராடிக் கரை ஏறினள். வைத்த இடத்தில் கண்டிகை இல்லை. திக்கென்றது மனம். அதைத் தன் கண வரிடம் அறிவித்தாள. எவர் எடுத்திருப்பர்? விடுவதில்லை திருடனை எனறு, படபடத்தார் சூரசேனர். தன்மார்த்தர் நாற்புறமும் நோக்கினர். இப்பொழுதுதான் திருடு நடந் திருக்கிறது. எடுத்தவர்கள், வெகு தூரம் போயிருக்க முடியாது. இங்கேயே இருங்கள் என்று, மூன்று மாதரையும் நிறுத்தி வைத்து, ஆடவர் இருவரும் விரைந்து நடந்தனர். எஙகும் தேடினர்.

எதிரில் ஒரு வேடுவர் தலைவன். நெற்றியில் நீறு. குங்குமப் பொட்டு எங்கோ போகிறுன. தேடும் பொருள், அவன் கழுததில இருப்பது தெரிகிறது. உற்று நோக்கினர். ஆம். அது நமது மாலைதான என்று அறிந்தனர்.

தர்மார்த்தர், அஙகிருந்த ஒரு மர நிழலில் அமர்ந்தார். சூரசேனு ! ஆத்திரப் படாதே ! நான் கூப்பிட்டதாகச் சொல்லி, அவனைக கொண்டு வா என்றுர்.

சூரசேனர் விரைந்தாா. அண்ணு உனனை அழைக்கிறுர் என்றுா. அழைப்பவர் அரச குலத்தவர் எனபதைத் தோற்றத் தால் அறிந்த அவன, இணஙகினுன். விரைந்தான். வந்து தர்மார்த்தரை வணஙகினுன்.

இராஜயோகிகளே ! இன்று புனித குலதெய்வத்தை வழிபடப் புறபபடடேன. இடை வழியில் தெய்வம், இம்

மகிழ்ந்து மணமலர்தூய், மனமுன்னை எண்ண,
இகழ்ந்துலகப போக்கை இருககின்றுர் ஞானியரே.

மாலையை யீந்தது. அதை யடுத்து, இராஜ சேவை. ஆஹா! என் வாழ் நாளிலேயே இத்தினம் ஒரு சுப தினம்.

வனம் நோக்கி எதைக் கருதி வந்தீர்கள்? வாடியுளது உங்கள் வதனம். தேனும் தினைமாவும், காயும் கனியும், கிழங்கு வகைகளும், கட்டளை யிட்டால் இப்போதே கொண்டு வந்து கொடுக்கிறேன் என்று, விநயம் காட்டி விண்ணப்பித்தான்.

தர்மார்த்தர், அவனது நற்குணம், நயமொழிகளை அறிந்தார். ஆலோசித்தார். சிறிது நேரம் ஒன்றும் பேசாது இருந்தார்.

கானவர் தலைவா! உனது அனபிற்கு உகந்தோம். கண்டிகையைக் கழற்றிவைத்தோம். நீராடினம். கரையேறினம். மாயமாய் அது மறைந்தது. எடுத்தாரைத் தேடி வந்தோம். அது உன் கழுத்தில் இருக்கிறது. அது எங்கள் பொருள். நீ நல்லவன். கொடுததுவிடு. அதுதான நலம் எனருர் தர்மார்த்தர்.

மறவர் தலைவன் மவுனம் ஆயினன், கண்கள் சிவந்தன. சிறிது நேரம் பொறுத்து வாய்திறந்தான்.

பெருமக்களே! இந்த இடம் எங்கள் சொந்த இடம், இங்கு வருபவர்களை, உபசரிப்பது எங்கள் வழக்கம். அவர்களில் பொய்ம்மையர் மெய்ம்மையரை, எங்களால் புரிந்து கொள்ள முடியும். வீணர்கள் என்ருல், அவர்களை விரட்டியிருக்கிரும். நீங்கள் கொண்டிருப்பது தவக்கோலம். மாபெரும் ஒளியுடையது இம்மாலை. இதைக் கவர எண்ணி, கபட நாடகம் ஆடுகிறீர்கள் என்று, கருதுகிறது எனது மனம். இது எனக்குத் தெய்வம் தநத பரிசு! வேறு பேச்சு வேண்டா எனறு வெடு வெடுததான்.

கற்பு நிறைமனைவி, கண்யநிறை மைந்தரெலாம்,
சிற்பரா! நின்னருளிற் சீர்த்திபெற்ற செம்மையரே.

கிராதர் தலைவா ! சொல்வதைக் கேள் ! இது உனக்குத் தெய்வம் தந்தது மெய்யானால், சால்பு தவறாமல் அது உனக்குச் சாட்சி சொல்லுமா ? புறப்படுவோம் ; அக்கோயிலுக்கே போவோம் என்றார் தன்மார்த்தர்.

கல கல என்று நகைத்தான் கானவன். ஐயன்மீர் ! இதுவரை, ஒரு இடத்திலேனும், தெய்வம் சாட்சி சொன்னது உண்டா ? இச்செய்தி கதைகளில் இருக்கலாம். கண்முன் இந்த அனுபவத்தைக் கண்டவர்கள் யார் ? இப்போது நான் சொல்கிறேன். இது உம்முடையது என்பதற்கு, கண்முன் வந்து சொல்ல ஒரு சாட்சியைக் காண்பியும். அப்போதே இதை அளித்து விடுகிறேன். வேறு வாதம் வேண்டா. உங்கட்கு இது உயர்ந்ததாகத் தோன்றலாம். தெய்வப் பரிசு என்பதை யன்றி, எனக்கு இது பெரியதல்ல. ஏமாற்ற எண்ணினால், அது எங்களிடம் பலிக்காது என்று எச்சரிக்கை செய்கிறேன். எம்மவரும் வந்ததில்லை. நானே வலிந்து எடுத்ததும் இல்லை. விமல வழிபாட்டு நேரம், வீணே விரையம் ஆகிறது. வருகிறேன் என்று, அவன் மதயானை போல் நடந்து மறைந்தான்.

இருவர் மனமும் அதிர்ந்தன. குலத்தால் வேடுவன். எனினும் அவன் குணவான். சாதாரண வழியில் சரிப்படுத்த நினைத்தேன். மன்னர் குலத்து நம்மை, அவன் அதே வழியில் மடக்கினன். எப்படியோ போகட்டும். கைவிட்டுப் போன பொருள், இபபோது இருக்கும் இடம் தெரிகிறது. இனி அது கைக்கு வரும் வழியைக் கருதுவம் என்றார் தன்மார்த்தர்.

அண்ணா ! இவன், கொள்ளைக்கும் கொலைக்கும் பின் வாங்காத குலத்தவன். குல தெய்வம் கொடுத்தது என்பதே பொல்லாத பொய். குணங் கெட்டவர்களைத் தண்டிப்பது

அருந்ததியின் காலவழியின ஆக்கமுளர் தோன்றி,
திருந்துநெறி கற்பித்துத தெய்வநெறி காட்டுனரே.

குற்றம் ஆகாது. அரியாய இவனிடம் இரக்கம் காட்டுவது அரச தருமம் அல்ல. உத்தரவு கொடும்! அவன் தலையை உருட்டி, கண்டிகையைக் கைப்பற்றித் திரும்புகிறேன் என்று, சூரசேனர் கடு கடுத்துக் கூறினர்.

புனித தன்மார்த்தர், புன்னகை செய்தார். சூரசேனு! பொறு! அது நமது பொருள். எப்படியும் வழிமுறையாக வரும் என்றார்.

எதிரில் ஒரு கோங்கு மரம். அதன நிழலில் ஒரு சித்தர். அவர் பெயர் மார்க்கல்யர். அரிய நிட்டை அகன்றது. கண் விழித்தார். எழுந்தார். நடந்தார். எதிர்ப்பட்ட அவரை, இருவரும் வணங்கி எழுந்தனர். மாதவச் சித்தர் மார்க்கல்யர், அமர்க என்று அறிவித்தார். தாமும் ஒரு கல்மேல் தங்கினர்.

சூரசேனு! விவரம் அறிவோம். அந்த மணி ஒலி, ஆலய வழிபாட்டை அறிவிக்கிறது. மறவர் தலைவன், அங்கே இருபபான். போ! நாம் அழைத்ததாகச் சொல்! உடனே வருவான். அதன்பின், ஆவன குறித்து ஆராய்வம் என்று அறிவித்தார்.

அப்படியே சூரசேனர் சென்றார். அறிவித்தார். வேடர் மன்னன் விரைந்து வந்தான். முனிவரை எட்டுறுப்பும் நிலம் படிய இறைஞ்சினன். கைகட்டி வாய்பொத்தி நின்றான்.

மங்கலம் விளைக! மலைநில மனனு! கண்டிகையைக் கழற்றித் தா! என்றார்.

மறவன் முகம் மலர்ந்தது. அதை உடனே எடுத்தான். முனிவர் கரத்தில் கொடுத்தான். வாங்கினர் மார்க்கல்யர்.

தன்மார்த்தா! அரிய இவனது குண நலன்களை, இதற்கு முன்னரே அறிந்துளை! இவன் இதை அபகரிக்கவில்லை. இதனில் இவனுக்கு இச்சையும் இல்லை. கடவுளை வழிபட

தொல்லை பலவற்றைத் தோற்கடிக்கும் தெய்வசக்தி;
ஒல்லை யுணர்ந்ததனை ஓர்ந்தார்கள், உய்வாரே.

வந்த வழியில் கண்டான்; கடவுள் தந்த பரிசென்று கருதினன். இவ்வளவுதான் நடந்தவை! தெரிகிறதா!

அப்பா! வழியில் கண்டால் எடு! உடையவர் கேட்டால் கொடு எனும் இப்பழமொழியை நீ அறியாயா? உடைமைக்கு இவர்கள் உரியவர்கள்!

ஸ்வாமி! இவர்கட்கே உரியது இது என்று தாங்கள் அறிவித்த பின், அதை அவர்களிடம் அளிப்பதுதான் அறம் என்று, விநயமொடு கூறினன் வேடர் பிரான.

நல்லது. நீ போய் வா என்று அவனை ஆசி செய்தார் மார்க்கல்யர். அவன் அவரையும், அரசர் குல இருவரையும் வீழ்ந்து வணங்கினன். விடை பெற்றுச் சென்றான்.

அதன்பின் மார்க்கல்யர், இருவரையும் நோக்கிச் சிறு நகை செய்தார்,

மூவாசை யுடையவர்கள் முனிவர்களாக முடியாது. எந்த சித்தியும் கைவல்யம் ஆகாது. இம்மாலை, உங்கள் தரத்திற்கு எம்மாத்திரம்? மாலை வழியில் மலர்ந்தது மாயை. ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் உத்தமர்கட்கு, உரிய தவக்கோலத் தைத் தாங்கி யிருக்கிறீர்கள். அதற்கு மாறுன மல்லாடல் சொல்லாடல மரபல்ல. உங்களைத் திருத்தி யாட்கொள்ள, நம்பன் ஆடிய அருள் நாடகம் இது. கருடன் எடுத்தான். இடையில் விடுத்தான். கானவன் தொடுத்தான். யாவும் சிவச்செயல். தெரிகிறதா? திருடினன். தண்டிக்க வேண்டும் என்று, தீர விசாரிக்காமல், சூரசேனு! உனனில் முனைப்பு உதித்தது. அது சரி. தீர்ப்பளிக்க, நீங்கள் இப்போது அரசர்கள் அல்லவே! பழைய வாசனையே இநதப் படபடப்பை அளித்தது. வாசனை இழுக்கும். வழுக்க வைக்கும். தரித்திரப் பழைய வழியில் தள்ளிவிடும். பூர்வ ஜன்ம வாசனை: தாயின்

ஆழ அமுக்கி, அடர்க்கின்ற ஆணவச்சூர்
வீழ அருள்முன விநயம்செய் கினறேமே.

கரு எனும் சூல வாசனை ; பிறந்த பின் உளதாகும் காலவாசனை முதலியவைகள் புறம்காட்டி ஓட, சதா சிவத்தைச் சிந்திப்பது சிறந்த நடை. இதன் வழியே எழுவது தெய்வ வாசனை. இனியாயினும் எச்சரிக்கையா யிருங்கள் என்று, மதியைத் திருததி அனுப்பினர் மார்க்கல்யர்.

தம் தவறை நினைந்து இருவரும் தளர்ந்தனர். பர்ண சாலைக்குச் சென்றனர். துணைவியரிடம் உற்றது உரைத்தனர். இவ்வளவும் இந்தக் கண்டிகையால் விளைநதது. இது இனி சதுரகிரி சுநதரர்க்கே உரியது எனறு, ஐவரும் அதை மாதேவர்க்குச் சாத்தி மகிழ்ந்தனர். அதனபின், சிவன்பால் வைத்த சித்தத்தராகிச் சிறந்தனர்.

போகர் ஒரு நாள், இவர்கள் இருக்கும் இடம் தேடி வந்தார். அதுதான் கம்பீர சித்தர்களின் கருணை. வணங்கி எழுந்த ஐவர்க்கும், வாழும் பல வழிமுறைகளை வகுத்துரைத் தார்.

சதுரகிரியில், எம்பெயர் கொண்ட வனம் இது. இக் காட்டின் மேற்குத் திசையில், தில்லை என்றொரு மரம் உளது. அதை முகம்வீங்கி மரம் எனறும் கூறுவார் உளர். மர நிறம் கறுப்பு. கிளைகள் சாம்பல் நிறம். இலைகள, அததி இலைகள் போல இருக்கும். காம்பை ஒடித்தால் பால் ஒழுகும். பாலைக் கரம் படாமல், அரைக்கால் படியளவு சேருங்கள.

செம்புத் தகட்டை, அதிக சன்னமாக அடித்து எடுத்து, அந்தப் பாலில் ஒரு மண்டலம் ஊற வையுங்கள். பிறகு வீரத்தையும் பூரததையும், அதே பாலவிட்டு அரைத்து, தகட்டைக் கவசமாககி, அரைததை உள்வைத்து, குக்குட புடம் இட்டால், அது சுண்ணம் ஆகும். அச்சுண்ணத்தைப் பசு வெண்ணெயில் குழப்பி, மூன்றுநாள் உண்டால், சிறப்பாகக் காயம் சித்தியாகும்.

வஞ்சனையைத தாலாட்டி, வாழ வளர்க்கின்ற
நெஞ்சினரை நீங்கியுற, நின்மலனே வாராயே.

இன்ருெரு முறையும் உண்டு.

மேல் சொன்ன தில்லை மரத்திற்குத் தென்திசையில், எடுப்பான ஒரு திட்டு இருக்கிறது. அதன்கீழ் மணல் வாரி ஓடை எனும் ஒரு வாய்க்கால் உளது. அதன் கரையில் சிவந்த இலைக்கள்ளி என்ற ஒரு மூலிகை உளது. அதன் இலை சிவப்பாக மின்னல் போலப் பிரகாசிக்கும். காம்பு மட்டும் சாம்பல் நிறம். அதன் பாலை குன்றிமணி எடை எடுத்து, சர்க்கரை சேர்த்து, மூனறு நாள் புசிக்க வேண்டும். அடுத்த மூன்று நாள் வரை மறு பத்தியம் இருப்பது அவசியம். உண்ணும் போதும், மறுபத்திய காலத்தும், பகலில் மோரன்னம். இரவில் பால்சோறு. இப்படி அருந்திஞல், காயம் வச்சிர காயம் ஆகும். முயலுங்கள்! கண்டு பிடியுங்கள்! உண்ணுங்கள் என்று அருளி, மாபெரும் போகர் மறைந்தார்.

ஐவரும் முயன்றனர். அவைகள் இருக்கும் இடங்களை ஆய்ந்தனர். பாடுபட்டுத் தேடிய அவைகளால், பயனை எய்தினர். நடந்ததை நினைக்கும் அளவு நம்மளவு. வாழப் பிறந்த அவர்கள், முயன்று வாழ்பவர்கள்!

வாழ்க சித்தர்கள் வழிமுறை!

ஓம்.

அருணகிரிநாத சுவாமிகள்

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

[திருவாஞ்சியம் முதல் பந்தணை நல்லூர் வரை]

" கருதுமாறிரு தோள்மயில் வேலிவை கருதொணு வகை யோரரசாய் வரு வேதியன் "— [பன்னிருதோள், வேல், மயில் இவைதமை மறைத்து முருகவேள் சம்பந்தராய் வந்தார்], எனக் கூறும் இப்பகுதி, " சடை மறைத்துக் கதிர் மகுடந்

திருந்தாப் பிறரைத் திருதத நினைத்து,
இருந்த நலமிழந்து ஏமாந்து போகேமே.

தரித்து, நறுங் கொன்றையந்தார் தணந்து வேப்பந் தொடை முடித்து, விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப் பூண் ஏந்தி, விடை நிறுத்திக் கயலெடுத்து, வழுதிமரு மகனாகி மீன நோக்கின், மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ் செய்வாம் "—என்னும் திருவிளையாடற் பாடலை நினைவூட்டுகின்றது.

குடவாயிலினின்றும் நீங்கித் * திருவாஞ்சியம் (55) அடைந்தார்.

" இப மாந்தர் " எனத் துவக்கும் இத் தலத்துப் பாடலின் (816) முதல் நான்கடியின் கருத்து—

" முடிசார்ந்த மன்னரும் மற்று முள்ளோரு முடிவிலொரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னு மிந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்ப தல்லாற் பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே "

என வரும் பட்டினத்தார் திருவாக்கின் கருத்தை ஒக்கும்; ' தினமணி ' எனத்துவக்கும் திருப்புகழ் 778-ஆம் பாடலின் கருத்தும் இதுவே.

' இறந்தால் ஒரு பிடி சாம்பருங
காணாது மாய உடம்பிதுவே ' —கந். அலங். 57.

' முத்தி அருள் தரு திருவாஞ்சியம் ' என்றார் இந்த 816-ஆம் பாடலில். இத்தலம் முத்தி அளிக்கும் தலங்களுள் ஒன்று.

" தில்லைவனங் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனங் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்

கண்ணும் மனமும், மவுனம் கனியுமா
எண்ணச்செய்! நன்னெறியில் என்னைவை, எம்மானே!

காஞ்சிகழுக குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்"

என்னும் பாடலில் கவனிக்கற்பாலது; திருவாஞ்சியத்தில் இறப்பவர்க்கு யம வாதனை இல்லை; 'கடிய கூற்றமும் கண் டகலும், புகல்தான் வரும்..... திருவாஞ்சியத் தடிகள் பாதம் அடைநதார், அடியார் அடியார்கட்கே—சம்பந்தர் 2-7-9.

இத்தலம் காசியிலும் சிறந்தது; ஏனெனில் காசி முத்தி தரும் தலமாய் இருந்த போதிலும், அங்கு இறக்கும் மக்க ளுக்குச் சூலத்தால அழுததும் வைரவ வாதை உண்டு; அந்த வாதையும் திருவாஞ்சியத்தில் இறககும் மக்களுக்குக் கிடை யாது. மேலும், இறக்கும் மாந்தர்களின் வலது காதில் சிவ பிரான் ஐந்தெழுத்தை ஓதி முத்தியளிப்பர் என அத்தலத்துப் புராணம் பின் வருமாறு கூறுகினறது.

செயிர றுகாசி முத்தி
சிறந்திடும் இறந்த மாக்கட்(கு)
அயில்முனை நெடிய சூலத்(து)
அழுந்து நோய் சிறிதுண(டு) அந்த
வயிரவ வாதை தானும்
இல்லை, அந்நகரின் மாய்ந்த
உயிர்வலச செவிககெ ழுத்தைந்(து)
உரைத்தலின அளிப்பான் முததி.

இத்தலத்துப் பாடலின ஆறும் அடியில "உலகீனற பச்சை யுமை அ(ண்)ணன வடவேஙகடத்தில் உறைபவன், உயர் சார்ஙக சகர கரதலன' என வருவதால், அருணகிரியார் காலத்தில் வட வேங்கடத்தில் திருமால் கோயில் கொண்டிருந் தார் என்பது தெரிகினறது.

ஏழாவது அடியில் வரும் "சுபரமணிய சண்முகவேலன்" என்னும் திருநாமப பிரயோகம் அருமையானதொன்று.

செய்த அறம்யாவும, தீவினையின் சேர்க்கையினால்,
மெய்யா அழியாமல், கண்பார்நீ மேலோனே!

திருவாஞ்சியத்தை விட்டு நாராயணன், பிரமர், சந்திரா தித்தர் முதல் நாகர், கந்தருவர், சித்தர், ஆராலு மளவிடற் கொண்ணுன உலாவ (சே. பு. 992).

திரியம்பகபுரத்துக்கு (56) வந்து முருகவேளேத் தரிசித்து, அங்கு 'உரையொழிநது' (829) எனத் துவக்கும் பாடலைப் பாடினுர். பின்னர், திரியம்பக புரத்தினின்றும் புறப்பட்டு கூந்தலூர் (57) என்னும் தலத்துக்கு வந்தார். அங்கு "தரையினில் வெகுவழி" (878) என்னும் பாடலைப் பாடினர். அப்பாடலில் இராவணனுடைய இருபது தோள்களையும் அவன் ஏந்திய வாளையும் ஒரே பாணத்தால் ஸ்ரீராமர் அறுத்து வீழ்த்தினர் என்னும் அரிய விஷயம் காணக் கிடக்கின்றது. ஸ்ரீராமர் "ஒகமாட, ஒகபாணமு ஒகபத்னீ வ்ரதுடே" என்பர் தியாக ராஜ சுவாமிகள். இப்பாடலில் வரும் "வெகுமல ரதுகொடு வேண்டி யாகிலும், ஒருமலர் இலைகொடும் ஓர்நது யானுனே, விதமுறு பரிவொடு வீழ்ந்து தாள்தொழ அருள்வாயே" என்னும் அடி மனப்பாடம் செய்யததக்க அருமையான அடி. கூந்தலூரில் நின்றும் புறப்பட்டு திருவீழிமிழலைக்கு (58) வந்து, அங்கு "எருவாய் கருவாய்" என்னும் பாடலைப் (851) பாடினுர். அபபாடலில கணக்கிலாப் பிறப்பெடுக்கும் தொல்லையைக் கூறி, ஒரு முறை "முருகா" என்ற போதிலும் உயர்கதி வரும் எனும் உண்மையை, எளிய நடையில் அருமையாக விளக்கிப் பாடினுர். இபபாடல் மனப்பாடஞ் செய்து பாராயணஞ் செய்ய வேண்டிய பாடல்களுள் ஒன்ரும். இபபாடலில் உள்ள

"ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா எனவோ தருள்தாராய்"
"முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதாள் அருள்வோனே"

ஆபத்திற்(கு) அஞ்சா அருணேக்கம் பாலித்து,
வாபக்தா! என்றெனமுன், வாவிவந்தால் ஆகாதோ?

என்னும் அடிகள் ஜெபத்துக் குரியன; இப்பாடலில் மூன்றும் அடியில் வரும்

"ஒருதாய் இருதாய் பலகோ டியதாய்
உடனே அவமாய் அழியாதே" என்பது.

"எனக்குத் தாயாகியாள் என்னையீங் கிட்டுத்
தனக்குததாய் நாடியே சென்றாள்—தனக்குத்தாய்
ஆகி யவளும் அதுவானால் தாய்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு"

என்னும் நாலடியாரை நினைவூட்டுகின்றது.

இப்பாடலின் ஈற்றடியில் "செழுமா மதில் சேர் அழகார் பொழில் சூழ் திருவீழி" என்றார்; திருவீழி மிழலையின் மதில், பொழில் இவைகளின அழகைச் சம்பநதரும் " வான் அணவு மாமதில்...வளங்கொள் பொழில்வாய் வீழிநகரே" என்றார். (3-80-9)

திருவீழி மிழலையினின்றும் புறப்பட்டு திருஆவடு துறையை (59) அடைநது, "சொற் பிழை வராமல்" என்னும் திருப் புகழைப் (852) பாடினார். இப்பாடலில் சொற்பிழை வராத வண்ணம் பாடவேண்டு மென்பது அருணகிரியாரின் உபதேச மொழி; இங்ஙனமே அயில் வேலன கவியை அன்பால் எழுத்துப் பிழையறக கற்கின்றிலீர் என்றார் கந்தர் அலங்காரத் திலும் (2). இந்த உபதேச மொழிகளை அடியார்கள் அவசியம் பின்பற்றி நடக்க வேண்டும்.

பின்னர், அங்கிருந்து "திருபந்தணை நல்லூரை (60) அடைந் தார். அங்கு கநதபிரானை வணஙகி ஏழு திருப்புகழைப் (854-860) பாடினார். 'கந்துகம்' என்னும் சொல்லுக்கு பந்து எனறும் பொருள் இருப்பதால், ஒரு பாடலில இத்தலத் தைக் 'கந்துகாபுரி' (860) எனப பெயரிட்டுப பாடியுள்ளார்.

வியாபகமா எங்கும் விரவியுள, தேவ
தியாக சமுத்திரமுன் சேவடிதா, எங்கோவே!

854-ஆம் பாடலில் "குறமாதொடு இசையும் சுரர் தரு மங்கை" எனருர். வள்ளியுடன இசைந்து - மனம் பொருந்தும் தேவி தேவசேனே; வள்ளியின் வரலாற்றை முருகவேள் சொல்லக் கேட்ட தேவசேனே மனமிக மகிழ்ந்து, 'என் தங்கையுடன் சேரப பெற்றேனே' என மகிழ்கினருள். 'வளளி... வணக்கம் செயய...பொருக்கென எடுத்துப் புல்லி, ஈங்கொரு தமியளாகி இருந்திடுவேனுக் கின்ரேர், பாங்கி வந்துற்றவாறு நன்றெனப் பரிவு கூர்ந்தாள்';

"குறவர் பாவை...தெளவை தன்திருப் பதஙகள் தம்மைத் தாழ்தலும் எடுத்துப் புல்லி, இனறுனேத துணையாப் பெற்றேன் என்ருள்"—கந்தபுராணம் 6, 24, 235, 254 "எகினினம்பழி எனத் தொடங்கும் 856 பாடலில் "எனே அடிமை கொண்ட சுவாமி சதாசிவ கடவுள் எந்தையர்" என வருதலால், அருணுசலேசுரரும் அருணகிரிநாதரை ஆட்கொண்டனர் என்பது பெறப்படும். சிவபிரான இவரை ஆட்கொண்டு திருநீறும் அளிததார் என்பது "கமழ்மா இதழ் சடையார் அடியேன் துயர் தீர்த்திட வெண்தழல் மாபொடியருள்வோர்" எனத் திரு அருணேத் திருப்புகழ் (568-ஆம் பாடலில்) உரைத்துள்ளது அறியற்பாலது.

"நிதி பொங்கப் பல தவங்களாலுனே, மொழியும் புத்திகள் தெரிந்து நானுனே, நிகர் சந்தத் தமிழ் சொரிந்து பாடவும் அருள் தாராய்" (860) பாடல் என ஓர் அருமையான வேண்டுகோளே முருக வேளிடம் விணணப்பிக்கின்றனர். இந்த வேண்டுகோள் அவர்க்கு வயலூரில் சித்தித்தது. இதை "திருப்புகழ் (105) நித்தம் பாடும் அனபது, செய்பபதியில் தந்தவன் நீயே" என வருவதால் அறியலாம். பந்தணே நல்லூருக்கு அருகிலுள்ள ம(ண்)ணியாற்றை, ஒன்பது கஙகை நதி கூடிய பெருமை உடையது என்கினருர்.

பாவக் கடலிற பதைத்துக கறையேறத்
தாவும் உணாவினுர், தாள்சாரச செய்யாயே.

"நவ கங்கைக் கிணை பகர்ந்த மாம(ண்)ணி நதி பங்கிற் குலவு கந்துகாபுரி" (860); ம(ண்)ணி ஆறுமுகவேளால் வரவழைக்கபபட்டு சுப்பிரமணிய நதி என்னும் பெயர் கொண்டு இருந்தது. "முருகப் புததேள், பொழிதிரு கருணை யாலே அழைத்திடப் போந்த மண்ணி" (மண்ணிப் படிக் கரைப் புராணம். நாட்டுப் 11).

பின்னர், பந்தணை நலலூரினின்றும் புறப்பட்டு மருத்துவக்குடி என்னும் தலத்தை (61) அடைத்தார்.

வானத்தின்மீது .....!

(அருணகிரிதாசன்)

நீலநிற வானம், இறைவனின் தோற்றத்தைத் தெற்றென நமக்கு விளக்குகின்றது. வானத்திலே தோன்றும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவற்றின் ஒளி, இறைவனின் ஜோதி ஸ்வருபத்தை விளக்குகின்றன. நாம் பூமியிலிருந்து கொண்டு வானத்தை நோக்கும்போது, இறைவனின் அற்புத சிருஷ்டிகள், நம் உள்ளததைச் சொல்லொணு வியப்பில் ஆழ்த்துகின றன.

வானவெளியானது, தன்னில் பலகோடி அண்டப்பகுதி களை தங்குமாறு வைததுள்ளது. அண்டப் பகுதிகள் யாவும், தமதுநிலை மாருதவாறு தத்தம் வசீகர சக்தியாலும், தடுப்புச் சக்தியாலும் ஒன்றை யொன்று பற்றியும் பற்ருமலும் இயங கிக்கொணடிருக்கின்றன. பூமியும் அவற்றைப போன்றதோர் அண்டகோளமே. தற்கால விஞ்ஞானிகள், பூமியில் மட்டும் தான் உயிர்களை வாழ்கின்றன. பிற அண்ட கோளங்களில் உயிர்கள் வாழ்கினறன என்புதற்கு நம்பத்தக்க ஆதாரங்கள் இல்லை என்று கூறுகின்றனர்.

வினயமெயச சம்பத்தில், எனறும் விருத்தி
நினையுமென னெஞ்சகத்துள், நீயிருக்க வேண்டாவோ?

அதாவது கண்ணினால் காணும் பொருள்களை மட்டும் அறிவதே விஞ்ஞானியரின முடிபு. காற்று கண்ணுக்குத் தெரியவில்லை. அதனால் காற்று என்று ஒரு பொருள் இல்லை என்று கூறமுடியுமா? காற்றை நம்மால்தான் சிருஷ்டிக்கவும் முடியுமா? காற்று இல்லாவிட்டால்தான் நாம் உயிர்வாழ்ந் திருக்க முடியுமா?

தண்ணீரானது பிரதிபிம்பத்தைக் காட்டும் தன்மையுடைத் தாய் இருப்பதால், கடலானது, நீல வானத்தைப் பிரதிபலித்துத் தானும் நீல நிறமாகக காட்சி யளிக்கிறது.

விஞ்ஞானிகளின் விதிப்படி, வானத்தில ஒருபொருள், அந்தரமாக இருப்பதற்கில்லை. பூமியின ஈர்பபுச சக்தியால், அப்பொருள் கீழே விழுநது விடுகிறது. அப்படியிருக்க, வானததினமீது மயிலாடக் கண்டேன்......!'' எனருர் ஒருவர். எனன ஆச்சரியம்! ஆசசரியமேதுமில்லை. வானம் என்பது ஞானப்''பரவெளி; சிதாகாசம், தகராலயம் என்பதெல்லாம் அதனையே குறிக்கும்.

'வனிதையர்க ளிருவரோடு,
வானுயரும் மலைகளிலும், ஞானியர்கள் உளமதிலும்
வண்ணமயி லூர்தியாக
வந்தருளும் வடிவழக! திருவேரகப் பதியில்
வளர்சுவாமி நாத குருவே!'

'உருவம்போல் உளளம் உணர்வும் உயர்ந்து,
பருவத்திற் செம்மை பயினருர்கள் பண்பினரே.'

என்பது திருவேரகப்பதிகம். இதனுள் வானமும் ஞானமும் குறிப்பிடபபடுகின்றன. திரு ஏர் அகம் - உயர்வு மிக்க உளம். அதுவே ஞானப் பரவெளி. அங்குதான இறைவன் வீற்றிருக் கினருன. நடனமிடுகின்ருன—சயனித்திருக்கினருன. மற் றும் தனது திருவிளையாடலின் இருபபிடமாகக் கொண்டிருக்

மானம் அழிந்து மதிகெட்டுப போகாமல்,
ஞானம் அடியேற்கு நம்பாநீ நல்காயோ?

கின்றான். எனவே அவனது ஊர்தியாகிய மயிலும் அங்கு ஆடிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய "மயில், குயிலாச்சுதடீ!" என்றார் பின்னும் அவர். மயில் எபபடிக் குயில் ஆகும்? மயில், கண்ணுக்கு இனி மையே ஒழிய, செவிக்கு இனிமையல்ல. குயிலின் குரலோ, செவிக்கினிமையானதாகும். அபபடியிருக்க மயில் எப்படி குயிலாக முடியும்?

மயிலின் உருவம் பிரணவாகாரத் தோற்றமாகும். ஞானி யர்கள் நிர்விகல்ப சமாதியில் ஆழும்போது, அவர்தம் உள்ளம் விசாலமடைகின்றது. பிரணவமானது அங்கு ஜோதி வடிவம் பெற்றுத் திகழ்கிறது. இதையேதான மயிலாடக் கண்டேன் என்று குறிப்பிடுகின்றார்.

ஓம்கார நாதஸ்வரூபிதம் உபேந்தரம் என்கிறது லக்ஷ்மீ நாராயண அஷ்டகம். எனவே பிரணவமானது ஒளிவீசத் தொடங்கும் போதே, நாதப்ரம்மம் அதனோடு இணைந்து விடு கிறது. ஒளியும், ஒலியும் ஞானியரை மகிழ்விக்கின்றன. மரண பயம் அவரை விட்டொழிகிறது, எனவேதான் தாயுமானாரும்,

'ஜெகமீதிருந்தாலும் மரணமுண்டென்பதை
சதாநிஷ்டர் நினைவதில்லை'

என்று குறிப்பிடுகின்றார். ஆநந்த ஞான நிஷ்டையில் உள்ள சீலர்களுககு, பிரணவாகார ஒளி, மயில் ஆடுவதாகவும், அப்போது தோன்றும் இனிய நாதத்தை குயில் கூவுவதாகவும் அருட்பெருஞ்சோதி வள்ளலார் குறிப்பிடுகின்றார்.

அடியார்களின் உள்ளத்தில் ஒளிந்து கிடக்கும் ஆணவ சர்ப்பத்தைப் பிரணவாகார மயில் கொத்தி உதறி எறிகிறது. எனவேதான் அருணகிரியாரும்,

குன்றிமணி போலும் செஙகண்வரி நாகம்
கொண்டபடம் வீசும் மணிகூர்வாய்
கொண்ட மயில்...............

கள்ளமனம் காலோய்நது, காணும் கதிமோன
வெள்ளம் எனையிழுக்க, வேந்தே அருளுதியோ?

என்று கூறுகின்றார். மேலும் பிரணவாகாரமானது, அ. உ. ம் என்ற படைக்கும் - காக்கும் - அழிக்கும் சக்தி கொண்ட அட்சரங்களை ஒருமையாகக் கொண்டுள்ளது என்பதைத் தெரிவிக்க, '' ஆடும்பரி '' என இரத்தினச சுருக்கமாக மயிலைக் குறிப்பிடுகின்றார்,

பிரணவமே மயில். பிரணவமே குயில. பிரணவமே முருகன. பிரணவமே வேல். பிரணவமே சேவல். பிரணவமே கருடன். பிரணவமே ஆதிசேடன். பிரணவமே சஙக சக்ரங்கள். பிரணவமே நாராயணன். பிரணவமே பாற்கடல். பிரணவமே சோலை. பிரணவமே மலை. இதனை அறிவிக்கவே அருணகிரிநாதரும்,

அயனெனவாகி அரிஎனவாகி அரனெனவாகி............

....

திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசை மேவும் பெருமாளே! என சோலை மலையில வீற்றிருக்கும் அழகராகிய நாராயணனையும், முருகனையும், இணைத்துத் திருப்புகழில் பாடுகினறார். இதையே பின்வரும் பாடல் கூறுகினறது.

மயிலும கிளியும், மானும், முயலும்
குயிலும் குலவும் கா கிரி தனிலே
பயிலும் பரமா! பாற்கடல மிசையே
துயிலும் பரமா னந்தன மருகனே!

—ஸ்ரீ முருகன பாமாலை.

கா - சோலை. கிரி - மலை. சோலைமலை.

எனவே இததகைய அரிய காட்சியைப பெறுவதறகு முருகனைப் பிரார்த்திபபோமாக! இபபோதிருநது முயற்சித தால, முயற்சி திருவினையாக்குமல்லவா?

வீணபேசசுப பேசி விரையம் ஆகாதபடி,
காண்காதல் காட்டி,அருள காலகாட்டி ஆளாயோ?

LIFE BOAT

Man is but a tiny boat in the ocean of Life. He has to ply it well, if he would at all gather the treasures of life. He has to keep his boat afloat in all security amidst the storms that infest the ocean, avoid the rocks submerged beneath the surface, plug the holes that may let in the leathal waters of death, and move on from port to port in enough speed to achieve the purpose of life and in an all balanced safety reach the destination.

Life is no matter for scorn. It is a kindly gift of the Lord. Man in his perversity can make of it an ugly nuisance; but, it is in his power to make it a thing of the greatest value to oneself and the world. Swami Vivekananda declared ' May I be born again and again, and suffer thousands of miseries, so that I may worship the only God that exists, the only God I believe in, the sum total of all souls, and above all, my God the fallen, my God the miserable, my God the poor of all races, of all species, the special object of my worship. The poor, the illiterate, the ignorant, the afflicted, let these be my God. Know that service to these above is the highest worship." To learn to steer your boat of life to these tabernacles of worship and gather the riches of the servi-

ces at these temples is the highest that man can achieve Let no man take to life as if it were an unwanted child. It is a mighty blessing. It is not made to be merely blown up. If it is lost, the medium of gains for the soul is lost.

The great SIVAVAKYAR said,

" ஓடமுள்ள போதலோ ஓடியே உலவலாம்
ஓடமுள்ள போதலோ உறுதிபண்ணிக் கொள்ளலாம்
ஓடமும் உடைந்துபோய் ஒப்பற்ற வெளியிலே
ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லை யானதே ! "

In the regions of the after life, destiny is but endured; but it is in this life only that destiny is made,

The great God had to take human form and by action had to build up what may ensure the destiny of man. The avathars are instances of how the Lord slaved as man for the building up of man's great destiny. The puranas are full of instances of how the Lord suffered to relieve men from the reactions of their sins. Lord Christ had to be nailed on the cross that sinners may escape punishment. Even suffering is after all a service, the greater the merit, the more willing it is submitted to.

The boat of life requires a ballast so that it may not be tossed about to and fro, this

side and that, and to keep it in a steady comfortable situation of float, a ballast is no small help. The conviction that the Lord of creation is your master, your friend, your guide and your servant is perhaps the most ensuring ballast that ever any boat was fitted with. Man is born only to be saved and not to be lost. This conviction arises from one's intense faith in the Lord's mercy and the easy approach to it made possible by the teachings of the saints and scriptures It is here that the alchemy of thought pays. By devotion and prayer, by bhajan and meditation, the Lord is easily invited to make your heart His residing abode, and one can put into the Lord's hands the shaping of one's own destiny. To work for it, is all our responsibility, but to shape it is in His hands. The weight of conviction and the intensity of faith in Him is the very ballast of life, and there has been no greater mariner than the Lord in the voyage of life.

As man mostly fills his boat of life with a hardened sense of his own EGO or AHANKARA in forgetfulness of the LORD, the boat suffers from the over-weight of its own burden, and tossed over the waves by the gales of desire, is ultimately dashed over the rocks—

the objects of desire—and is lost for ever. Saint APPAR prays :—

" மனமெனும் தோணி பற்றி, மதியெனும் கோலையூன்றி
சினமெனும் சரக்கை யேற்றி, செரிகடல் ஓடும்போது,
மதனெனும் பாறைதாககி மறியும்போதறியவொண்ணு(து)
உனையுனும் உணர்வை நலகாய் ஒற்றியூருடையகோவே!'

Before the boat of life sinks, Oh LORD! grant unto me that I meditate on thee.

(3—2) —*Thiruppugal Mani.*

Compliance with Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956 FORM IV

AMIRTHAVACHANI

1. Place of Publication :	...	54, Bunder Street, Madras-1.
2. Periodicity of the Publication :	...	Monthly.
3. Name of Printer :	...	V. Thirunavukkarasu
Nationality :	...	Indian
Address :	...	65, Tiruppalli Street. Madras-1.
4. Name of Editor :	...	S. Muthuswami
Nationality :	...	Indian
Address :	...	54, Bunder Street, Madras-1.
5. Name of Publisher :	...	S. Muthuswami
Nationality :	...	Indian
Address :	...	54, Bunder Street, Madras-1.
6. Name and Address of individuals who own the news papers :		Owned by The United Concern 54, Bunder Street, Madras-1. (registered firm of partners).

Partners :

S MUTHUSWAMI, 17, T. S. V. Koil St., Madras-4.
M. VYDESWARAN, " "
M. KRISHNAMURTHI " "
P. S. C. CHELLAMMAL, 18, Nyniappa Maistry St., Madras-3.

I, S. Muthuswami hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

REQUEST ; Let Your Annual Subscription of Rs. 3 (Rupees Three) be remitted for the next year 1965 April to 1966 March.

அமிர்தவசனி பிரசுரங்கள்

54, பந்தர் தெரு, சென்னை-1.

குகஸ்ரீ ரசபதி அவர்களின் விரிவுரையுடன்

அரிய அருள் நூல்கள்		ரூ.	பை.
கந்தரநுபூதி	(விரிவுரை)...	1	25
திருவகுப்பு (6 மட்டும்)	,, ...	1	50
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	,, ...	2	00
கந்தர் கலிவெண்பா	,, ...	2	00
திருக்கயிலாய ஞானவுலா	,, ...	2	00
விநாயகர் அகவல் (ஔவையார்)	,, ...	1	50
கோளறு பதிகம்	,, ...	0	40
சண்முக கவசம் (பாம்பனடிகள்)	,, ...	0	60
திருப்புகழ்மாலை (360 பாடல் மட்டும்).	...	1	25
கந்தக்கதம்பம் (பாடல்மட்டும்) 288 பக்கம்.	...	1	25

தபோவனப் பதிப்பக நூல்களும் அனுப்ப இயலும்.

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுபபவும். வி.பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும், வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சநதாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பததிரிகை கிடைக்கும். வருட நடுவில் சநதாச் செலுததினால், சிததிரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

கொள்ளுதின்னும் மாமாவைக் கூறியே விற்கவந்த
கள்ளத் தனத்துக் கறைக்கண்டன்—பிள்ளையாய்
வாய்ந்தவனைத், தென்போரி வாழ்பவனை, நான்மறையால்
ஆய்ந்தவனை நெஞ்சமே அண்டு!

[மாமா - கரியாகிய குதிரை] —சமரபுரி அந்தாதி.

Regd No. M. 5390 பங்குனி ௴ (1965 அமிர்தவசனி 16-12)

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.
MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பினுயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3.
டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால்,
தயை கூர்ந்து வருகிற விசுவாவசு வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்
படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.